

Registered as a Newspaper

பக்கங்கள் 6

விலை ரூபா 5·00

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி · PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 05 21-11-94 திங்கட்கிழமை ஓசை 276

பல்கலை, அனுமதி வெட்டுப்புள்ளி டிசம்பர் முதல் வாரம் வெளிவரும்

1994/95 கல்வியாண்டுக்காக பல்கலைக்கழகங்களுக்காக தெரிவான மாணவர்க்கான அறிவித்தல் டிசம்பர் மாத நடுப்பகுதியில் அனுப்பி வைக்கப்படும். எட்டு தேசிய பல்கலைக் கழகங்களிலும் உள்ள பல்வேறு பீடங்களுக்குமான சராசரி வெட்டுப் புள்ளிகள் டிசம்பர் முதலாம் வாரம் வெளிவரலாம் என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ம்முறை பல்கலைக்கழக அனுமதியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

உண்மையையும் நேர்மையையும் தார்மீக நெறியாக மக்கள் தொடர்புச் சாதனங்கள் கொள்ளவேண்டும்

'புலிகளின் குரல்' வாழ்த்துச் செய்தியில் தலைவர் பிரபாகரன்

ஒரு விடுதலைப் போராட்ட சூழலில் மக்கள் தொடர்பு சாதனங்களின் பங்கு முக்கியமானது. இவை மக்களுக்கு உண்மை நிலைமையை எடுத்துச் சொல்ல வேண்டும் உண்மையான விளக்கங்களைக் கொடுக்க வேண்டும் உண்மையையும் நேர்மையையும் தார்மீக நெறியாகக் கொள்ள வேண்டும். உண்மையைத் தாங்கி வரும் கருத்துக்களே மக்களை கவர்ந்து கொள்கிறது மக்களை விழிப்புணர்வு கொள்ளச் செய்கிறது.

இவ்வாறு தேசியத் தலைவர் வே. பிரபாகரன் விடுதலைப்புலிகளின் அதிகார பூர்வ வானொலியான 'புலிகளின் குரல்' நான்காவது ஆண்டு சேவையை பூர்த்தி செய்தது குறித்து வெளியிட்ட ஆசிச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தி வருமாறு;

எமது விடுதலை இயக்கத்தின் அதிகார பூர்வ வானொலியான 'புலிகளின் குரல்' இன்றுடன் தனது நான்காவது ஆண்டு சேவையை நிறைவு செய்கிறது. இரண்டாம் கட்ட தமிழீழப் போர் தொடங்கியதை அடுத்து ஆரம்பமான எமது வானொலி, யுத்த சூழலால் எழுந்த நெருக்கடிகளுக்கும் சவால்களுக்கும் ஈடுகொடுத்து. பிரமாதமான முறையில் பெருவளர்ச்சி கண்டிருக்கிறது விடாமுயற்சியாலும் கடின உழைப்பாலும் ஈட்டப்பட்ட இந்த சாதனை பாராட்டுக்குரியது.

உன்னதமான இலட்சியப் பாதையில் முன்னேறிச் செல்லும் எமது விடுதலைப் போராட்டத்தை களங்கப்படுத்தும் நோக்குடன் பல்வேறு சக்திகள் செயற்பட்டு வருகின்றன நீண்ட காலமாகவே, இந்த சக்திகள் எமது போராட்டத்திற்கு எதிராக, திட்டமிட்ட ஒரு பிரச்சார யுத்தத்தை நடத்தி வருகின்றன. உண்மைகளை மறைத்து, பொய்களை திரித்து, விசமத்தனமான பிரச்சாரத்தை செய்து வருகின்றன மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடித்து, மக்களை குழப்பித் திசைதிருப்பி போராட்டத்தை நசுக்கிவிடும் நாசகார நோக்கில் இந்தப் பிரச்சாரப் போர் முடுக்கிவிடப்பட்டிருக்கிறது

பொய்மையையே பிரதான ஆயுதமாகக்கொண்டு எமது போராட்டத்திற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட இந்தக் கருத்துப் போரை முறியடிக்க நாம் உண்மையை ஆயுதமாக ஏந்தினோம். அந்த உண்மையின் குரலாகவே 'புலிகளின் குரல்' ஒலித்துக்கொண்டிருக்கின்றது.

பொய்களுக்கு ஆயுள் குறைவு அவை வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் சென்றுவிடுகின்றன. ஆனால் சத்தியம் என்றும் சாவதில்லை. அது வரலாற்றின் ஆன்மாவாக என்றும் நிலைத்து நிற்கும்.

ஒரு விடுதலைப் போராட்ட சூழலில் மக்கள் தொடர்பு சாதனங்களின் பங்கு முக்கியமானது. இவை மக்களுக்கு உண்மை நிலைமையை எடுத்துச்சொல்லவேண்டும். உண்மையான விளக்கங்களைக் கொடுக்கவேண்டும். உண்மையையும், நேர்மையையும் தார்மீக நெறியாகக்கொள்ளவேண்டும். உண்மையைத் தாங்கிவரும் கருத்துகளே மக்களைக் கவர்ந்துகொள்கிறது. மக்களை விழிப்புணர்வுகொள்ளச் செய்கிறது.

எமது விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலையை, செய்தித் தொகுப்பாக, கருத்துத் தொகுப்பாக, கலைவடிவமாக, மக்களுக்கு எடுத்துக்கூறி எமது வானொலி மக்களின் நல்லெண்ணத்தைப்பெற்று வருவதைக்காண நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். 'புலிகளின் குரல்' வானொலியின் அபாரமான வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அயராது உழைத்துவரும் நிர்வாகப் பொறுப்பாளர்களுக்கும், கலைஞர்களுக்கும், ஏனையோருக்கும் எனது பாராட்டுக்கள்.

'புலிகளின் குரல்' தனது பணிகளை வெற்றிகரமாக முன்னெடுக்க எனது நல்லாசிகள்,

ரத்வத்தைக்கு தலைவர் பிரபாகரன் கடிதம்; நெடுங்கேணி சம்பவம் பற்றி விசாரிக்குக

இரு வார கால போர் நிறுத்தத்தை பரிசீலனை செய்வதாகத் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுங்கேணியில் கடந்த 16ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினர் ஒளிந்திருந்து தாக்கியதில் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் அமுதனை (மல்லி) கொல்லப்பட்டமை தொடர்பாக விசாரணை ஒன்று நடத்திப் பதில் தருமாறு சிறிலங்காவின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தைக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் கேட்டுக்கொண்டுள்ளார். இருவார காலப் போர் நிறுத்தம் ஒன்று செய்வது தொடர்பாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்திற்குப் பதில் அளிக்கையிலேயே இவ்வாறு அவர் கோரியுள்ளார். மேலும் இக் கடிதத்தில் போர் நிறுத்தம் சம்பந்தமாக அரசாங்கம் தெரிவித்துள்ள யோசனைகள் குறித்து கவனமாகப் பரிசீலித்து வருவதாகவும், நெடுங்கேணிச் சம்பவம் குறித்து பதில் கிடைக்கப்பெற்றதும் போர்நிறுத்தம் சம்பந்தமான முடிவை அறியத்தருவதாகவும் தேசியத் தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு நேற்று 'புலிகளின் குரல்' வானொலியின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டுசிறப்புரையாற்றிய அரசியல்ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். மேலும் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பேசுகையில்,

டிசம்பர் 15க்குள் ராணுவ கட்டமைப்பில் பாரிய மாற்றங்கள் இடம்பெறலாம்

ராணுவத் தளபதியாக பிரிகேடியர் ஜனக பெரேரா?

(கொழும்பு)

சிறிலங்காவின் முப்படைகள் மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றின் தலைமைப் பீடங்களில் டிசம்பர் 15-ம் திகதிக்குள் பாரிய மாற்றங்கள் நிகழவிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துளளார்;

இதன்படி இராணுவத் தளபதியாக கமாண்டோ படைப் பிரிவின் தலைவர் பிரிகேடியர் ஜனக பெரேரா நியமிக்கப்படலாம் என நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

இம்மாற்றங்கள் குறித்த திட்டத்தை அரச உயர்மட்டம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

அநேகமாக பொலிஸ் இராணுவ உயர் தலைவர்களின் பதவிகளில் மாற்றங்கள் ஏற்பட இருப்பதாகவும் பாது

[6ஆம் பக்கம் பார்க்க)

பாதுகாப்பு செயலாளராக சந்திரானந்த டி சில்வா?

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வணசிங்கவின் பதவிக்காலம் வரும் ஜனவரியுடன் முடிவடைவதைத் தொடர்ந்து அவரது இடத்திறகு தேர்தல் ஆணையாளர் சந்திரானந்தடிசில்வா நியமிக்கப்பட இருப்பதாக இராணுவ வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

தற்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப்

(5ஆம் பக்கம் பார்க்க)

முந்திய ஆர்வம் சந்திரிகாவிடம் இல்லை

இன்றைய அரசியல் சூழ்நிலை பெரும்பாலும் மக்களை குழப்புகின்றது. சந்திரிகா அம்மையார் பிரதமராக வந்தபோது காட்டிய ஆர்வம் இப்பொழுது இல்லை; அது போய்விட்டது. இப்பொழுது எல்லாம் தலைகீழாக நடக்கிறது. முரண்பாடாக இருக்கிறது. இதுதான் மக்கள் மத்தியில் ஒரு குழப்பம்.

ஹெலிக்கொப்ரர் ஆகாயத்தில் இருந்து சுடும்பொழுது எமது மக்கள் ஓடி ஒளித்தார்கள். ஆனால் தரையில் இறங்கும்பொழுது ஓடிப்போய் கட்டிப்பிடித்து கொஞ்சுகிறார்கள்.

பிரபாகரன் நேசக்கரம் நீட்டுகிறார்' சிங்களவன் கழுத்தை வெட்டிக்கொண்டு போகிறான். சந்திரிகா யாழ்ப்பாணம் வந்து பிரபாகரனைச் சந்திக்கப்போகிறேன்என்று சொன்னார். ஆனால் இப்பொழுது இந்தியாவிற்கு போகிறேன்என்று சொல்கிறார். இப்படியாக முன்னுக்குப்பின்முரணானமுறையில் அபத்தமான முறையில் ஒரு அரசியல் சூழ்நிலை இருக்கிறது.

உண்மையில் அரசியலில் என்ன நடக்கிறது? என்ன நடக்கப்போகிறது? ஏதாவது உருப்படியாக வருமா? இந்த பேச்சுவார்த்தைகள் தொடருமா? இந்த பேச்சு வார்த்தைமூலம் சமாதானம் ஏற்படுமா? என பெரிய கேள்விக்குறி ஒன்று மக்கள் மத்தியில் இருக்கின்றது.

சிலபேர் சொன்னார்கள் சந்திரிகா இன்னமும் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்என ஆர்வமாகத்தான் இருக்கிறார் என்று. ஆனால கொழும்பில் ஒரு குண்டு வெடித்தது. அந்த குண்டுவெடிப்புடன் அவரின் ஆர்வம் எலலாம் போய்விட்டது. அவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

மாவீரர் வாரம் இன்று ஆரம்பம் வடபகுதி எங்கும் எழுச்சிக்கோலம்

தமிழீழ தேசியக்கொடி ஏற்றலுடன் தமிழீழ மாவீரர் வாரம் இன்று தமிழீழமெங்கும் எழுச்சிபூர்வமாக ஆரம்பமாகின்றது.

தமிழீழ மண் மீட்பிற்காக தம்மை ஈகம்செய்த மாவீரர்களை நினைவுகூரும் முகமாக இன்றுமுதல் எதிர்வரும் 27-ம் திகதி வரை மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது.

மாவீரர்வாரத்தையொட்டி வீதிகள் தோறும் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் போராட்ட சாதனைகளும், மாவீரர் தியாகங்களும் ஓவியமாக சித்திரிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் வட்டாரீதியாக மாவீரர் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன அவை இன்று காலை 9-10 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளதுடன் அங்கு வைக்கப்பட்டிருக்கும் மாவீரர் நினைவுருவப் படங்களுக்கு பெற்றோர் சுடரேற்றி மலர்மாலை அணிவிக்கவுள்ளனர். இந்நிகழ்வில் காலை 10.00 மணிக்கு மாவீரர் வார ஆரம்ப நாள் உரைகள் இடம்பெறவுள்ளன

மாவீரர்வாரத்தையொட்டி தமிழீழம் எங்கும் எழுச்சிக்கோலம்பூண்டுள்ளது. யாழ். குடாநாட்டில் நூற்றுக்கணக்கான அலங்கார வளைவுகள் கட்டப்பட்டுள்ளதுடன் பிரதான வீதிகள், முக்கிய இடங்கள் அனைத்தும் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன, வீதிகள், வாசல்கள் தோறும் மாவீரர் நாளை சுட்டிக்காட்டும் பதா

[5ஆம் பக்கம் பார்க்க]

வரி விளம்பரம்

11.11.94 முதல் வியாழ மாற்ற பலாபலன்கள்

சத்யராவின் எல்லா ராசிகளின் பலன்கள் ரூ 10/- எங்கும் விற்பனையாகின்றது பாடசாலை உபகரணங்கள் O/L, A/L வினா விடைகள் கலண்டர்கள் விற்பனைக்குண்டு. வடிவேல் புத்தகசாலை 307, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம் (10142)

தவறிவிட்டது

18-11-94 அன்று ஆலங்கேணியிற்கும் கிளாலியிற்கும் இடையில் 534166715l5 V இல. உடைய அடையாள அட்டையும் சில முக்கிய பொருட்களும் ஒரு தொகைப் பணமும் தவறவிடப்பட்டுள்ளது இதைக்கண்டு எடுத்தோர் தயவுசெய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (10148)

விற்பனைக்கு

நல்லூர் சங்கிலியன் வீதியில் இல. 44 உடைய காணி கிணற்றுடன் கூடிய ஒருபரப்பு வஸ்திரமுடையது. தொடர்புகளுக்கு சோ. நிர்மலேஸ்வர சர்மா அந்திரான் முருகமூர்த்தி கோவில் நவாலி மானிப்பாய். (சி/10746)

முன் கூட்டியே பதிவு செய்யுங்கள்

நல்லின பிறிமா புறோயிலர் குஞ்சுகளை பெற்றுக்கொள்வதற்கு இன்றே பதிவு செய்யுங்கள். தொடர்பு:- மேஜர் பிரதாப் செட்டிப் பண்ணை இராஜ வீதி, கோப்பாய். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம். (சி/10744)

நாய்க்குட்டிகள்

மூன்று மாதம் நிரம்பிய பொமரேனியன் வெள்ளை நிற நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. 45, சங்கிலியன் வீதி, நல்லூர். [10156]

யாழ். நூலகத்தை எரித்த கதையை

'அக்கரைச்சீமையில்' நாவலின் வாசியுங்கள் 250 நாடுகள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை தனது 45 வருடகாலஇலக்கிய அநுபவத்துடன் கதை சொல்கிறார் லண்டன் கதை 105 பக்கங்கள் (9928)

அளவையியல்

கடந்த கால வினாக்கள் 81 89 பகுதி 1 விற்பனையாகின்றது தொடர்பு: D.M I, கல்வி நிலையம் வெலிங்டன் சந்திக்கு அருகாமையில். குறிப்பு சொற்ப பிரதிகள் மட்டுமே கையிருப்பில் உண்டு (10155)

தொடர்புகொள்ளவும்

திரு சுப்பையா ஞானேஸ்வரன் என் தம்பியே! உன்னைக் காணாமல் அம்மா கடும் சுகவீனமுற்று இருக்கிறா. உடன் வந்து ஆறுதல் தரவும், உன் தங்கை சின்னத்துரை விஷ்ணுதேவி, காராவளவு. அல்வாய் கிழக்கு அல்வாய் (10158)

ஆதாரம் காட்டி பெறவும்

பயணிகள் படகுச் சேவை துறைகளான புலோப்பளை, பூநகரி ஆகிய இடங்களில் தங்க நகை, பணப்பை போன்றன கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதன் உரிமையாளர்கள் தகுந்த ஆதாரம் காட்டி கந்தர்மடத்தில் அமைந்துள்ள யாழ். மாவட்ட வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு வருவாய் பொறுப்பாளர் கேட்டுள்ளார்

நிரந்தரகுடியிருப்பாளருக்கு நிரந்தர வதிவிட பாஸ்

வவுனியாவில் விரைவில் வழங்கப்படும்

(வவுனியா)

1989ம் ஆண்டுக்குப் பிறகு வாக்காளராக பதிவு செய்யப்பட்ட வவுனியா பகுதியின் நிரந்தரக் குடியிருப்பாளருக்கும், நிரந்தர இடமாற்றத்துடன் இப்பகுதியில் சேவையாற்றும் அரச ஊழியர்களுக்கும நிரந்தர வதிவிட பாஸ் வழங்க, சிறிலங்கா படையினர் திட்டமிட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வதிவிட அனுமதியை புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என படையினர் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாப்பரசரின் பாதுகாப்பிற்கு 18 ஆயிரம் பொலிசார்

(கொழும்பு)

பாப்பரசரின் கொழும்பு விஜயத்தையொட்டி 18,000 பொலிசார் தலைநகரில் காவற்கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என அறிவிக்கப் பட்டுள்ளது. இவரின் விஜயத்திற்காக அரசு 13 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

காலிமுகத்திடல் நகர அபிவிருத்தி அதிகார சபையால் தற்போது திருத்தப்பட்டு வருகின்றது: எதிர்வரும் ஜனவரியில் பாப்பரசர் கொழும்பு வருவது தெரிந்ததே.

தளபாட பற்றாக்குறை

யாழ் இந்து மகளிர் கல்லூரி விடுதியில் இணைந்து இயங்கிவரும் புங்குடுதீவு இறப்பிட்டி அமெரிக்கன்மிஷன் வித்தியாலயம், இராஜராஜேஸ்வரி வித்தியாலயம், துரைச்சாமி வித்தியாலயம் ஆகியவற்றில் பெரும் தளபாடப் பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது. சுமார் 120 மாணவர்களையும் ஐந்து ஆசிரியர்களையும் கொண்ட இப் பாடசாலையில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஏற்ற கதிரை மேசைகள் இல்லையென்றும், இடம்பெயர்ந்தது தொடக்கம் இன்று வரை ஏதாவது சுமார் மூன்று வருடங்களுக்கு மேலாக எந்தவித பொது ஸ்தாபனமோ, தொண்டர் அமைப்போ இப் பற்றாக்குறை விடயத்தில் உதவ முன்வரவில்லையென்றும் பிரஸ்தாப வித்தியாலய வட்டாரங்கள்தெரிவித்துள்ளன. (22)

பனம்விதை நடுகை

கெருடாவில் தெற்கு கிராமிய உற்பத்திக் குழுப்பிரிவில் அண்மையில் 1000 பனை விதை நடுகை நிகழ்வொன்று நடைபெற்றது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கற்பகச்சோலைத் திட்டத்தின் கீழ் நடைபெற்றஇப் பனை விதை நடுகை நிகழ்வு அப்பகுதி கிராமிய உற்பத்திக் குழு தலைவர் தலைமையில் இடம்பெற்றது.

அப்பகுதி விவசாய போதனாசிரியர் நிறுவன வடமராட்சிக்கோட்ட இணைப்பாளர் கிராமசேவகர் ஆகியோர் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்ட இந்நடுகை நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வடமராட்சிக் கோட்ட தொடர்பாளர் முதலாவது விதையை நாட்டி நடுகையை ஆரம்பித்து வைத்தார்.

மண்மீட்பில் வித்தான முத்துக்கள்

எமது பாடசாலையில் கல்விகற்று
மண்மீட்கப் போராடி வீரச்சாவை தழுவிய
மாவீரர்களே!
மாவீரர் நன்னாளில் நினைவு கூருகிறோம்.
இந்நாளில்

1- வீரவேங்கை வெற்றி (அருள்மோகன் இரத்தினம்)
2- 2-ம் லெப்டினன்ட் தங்கச்சி (நிமலகாந்தன் முருகையா)
3- 2 ம் லெப்டினன்ட் தேவானந்தி (தேவராணி சுப்பிரமணியம்)
4- லெப்டினன்ட் தியாகு (யோகநாதன் இராசேந்திரம்)
5- 2-ம் லெப்டினன்ட் செந்தமிழ்ச்செல்வன் (கேதீஸ்வரன் கந்தையா)
6- கப்டன் தேவகுஜி (சுபத்திரா இரத்தினம்)
7- 2-ம் லெப்டினன்ட் இசையமுதன்/மனோச் (திரவியநாதன் ஜெகநாதன்)

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்திச்சங்கம், சபை,
யாழ்கீரிமலை நகுலேஸ்வர ம வி

(10157)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி

மாவீரர் நினைவாலயம் திறப்புவிழா

21-11-94 திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும் நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு அனைத்து வணிகர்களையும், ஊழியர்களையும், பொதுமக்களையும், போராளிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்,

குறிப்பு:- இந்நிகழ்வில் சகல வணிகர்களும், ஊழியர்களும் கலந்து கொள்வதால் அன்றைய தினம் யாழ்நகர வணிக நிலையங்கள் யாவும் காலை 10.00 மணிக்கே திறக்கப்படும் என்பதனை சகல பொதுமக்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

நன்றி, வணக்கம்

யாழ் வணிகர் சமூகம்
21, மேல்மாடி, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

(சி/10733)

3-ம்நாள் நினைவுக்கலசப்

அமரர் விசுவலிங்கம் இரசா

மண்ணில் 15-10-1911
விண்ணில் 22 10-1994

எங்கள் குடும்பத் தலைவராயமர்ந்து
எதிலும் புதுமைகள் கொண்டு மிளிர்ந்து
பொங்கும் அன்புடன் பொலிவுகள் ஈந்து
புன்னெறி நீக்கி நன்னெறி காட்டி
எங்களைத் தவித்திட வைத்தே இறைபதம்
ஏகிய எந்தையின் நினைவுகள் தேக்கி
என்றும் மாறா அஞ்சலியீந்து
எங்கள் கண்ணீர் அர்ப்பணம் ஈதே!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

21-11-1994 இன்று எமது இல்லத்தில் இடம்பெறும் அன்னாரின் நினைவுக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, சிவலிங்கம் (மகன்)

சந்தை ஒழுங்கை,
கொடிகாமம்

(10154)

நினைவு கூருகின்றோம்...

21. 11. 1994

1986-ம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - கல்லடிப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய,

நிலான் (ரூபசிங்கம் ரவிச்சந்திரன் - நாவலடி - மட்டு)

ஒலுமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

சிவா-பாலன் (வெள்ளையன் இராஜேந்திரன்-நெடுங்கேணி - மணலாறு)

லெப். கணேஷ் (தில்லைநாயகம் டொமினி சாந்தன் - புலோப்பளை - பளை)

நாவற்காடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

தயா (செல்லத்துரை விக்கினேஸ்வரன் 3-ம் வட்டாரம் முள்ளியவளை - முல்லைத்தீவு)

1988 ம் ஆண்டு கைதடிப் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டுவீரச்சாவெய்திய,

றோகன் (சின்னப்பர் றோகான் - தொடர்மாடி, குருநகர் - யாழ்)

கிளி - கோணாவில் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

தம்பிராசா தங்கரன்

1990 -ம் ஆண்டு மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

கஜலட்சுமி (கிருபையம்மா பேரின்பம்-கிரான் -மட்டு)

பூங்குயில் (சாந்தினி மாரிமுத்து - வட்டக்கச்சி - கிளிநொச்சி)

லக்கி (மனோரஞ்சிததேவி கார்த்திகேசு - சாமலோடை, காரைநகர் - யாழ்)

பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

நாமகள் (தேவமனோகரி வைரமுத்து-முன்னம்போடி வெட்டை, தோப்பூர் - திருமலை)

அறிஞன் (சாகேஸ்வரன் ஜெயராஜ்- செல்வநாயகபுரம்-திருமலை)

ஞானம் (ராமசாமி சந்திரலிங்கம் - தலவாக்கொல்லை - கண்டி)

மாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீதான தாக்குதலின் போது ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

கப்டன் ஜெகன் (சுந்தரலிங்கம் சுரேஸ்குமார்- செம்மலை - மணலாறு)

லெப். மாலி (துரைராஜா முத்துக்குமார் - நெடுங்கேணி - மணலாறு)

யாழ்- புன்னாலைக்கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

கணேஷ் (சித்திரவேலாயுதம் பிரபாகரன்-இருபாலை கோப்பாய் - யாழ்)

மாவிட்டபுரம் - கீரிமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

சரவணன் (கிருஷ்ணசாமி கணேசலிங்கம் - குமரபுரம், பரந்தன் - கிளிநொச்சி]

நெல்சன் (வீரசிங்கம் இந்திரகுமார் - கிளிநொச்சி)

லெப். நெவில் (நடராசா நாகேஸ்வரன் - அச்செழு, நீர்வேலி - யாழ்)

லெப்.தம்பி கந்தசாமி தம்பி - மயிலிட்டி, காங்கேசன்துறை - யாழ்)

செழியன் (சிதம்பரப்பிள்ளை சற்குணராசா - ஓட்டுமடம் - யாழ்)

கணேஷ் (நாகசோதி ஜீவநேசம் - புத்தூர் -யாழ்)

1993ஆம் ஆண்டு பூநகரி - நாகதேவன்துறை இராணுவக்கடற்படைக்கூட்டுத்தளம் மீது ''ஒப்பரேசன் தவளை'' நடவடிக்கையின்போது விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய-

மேஜர் வேந்தன் சினித்தம்பி செல்வராஜா- கொம்மாந்துறை, செங்கலடி -மட்டு)

திருமலை - மூதூர் கல்லாம்பாறுதுறையடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

லெப். உதயன் (சிவகுமாரசாமி நிர்மலதாஸ்-64ம் கட்டை, மூதூர் - திருமலை)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-10745)

பிற்போடப்பட்டுள்ளது

வலி.மேற்கு பிரதேச சபை சன சமூக நிலையங்களின்சுழிபுரம் உப-சமாசத்தின் அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு 19-12-94 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது அதிர்ஷ்டலாபச் சீட்டுப்புத்தகங்களை பெற்றுக்கொண்ட ச.ச. நிலையங்கள் அவற்றை ஒப்படைக்கவும்

விமலரூபன்
செயலாளர்

(சி-10748)

நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி

1995-ம் ஆண்டிற்கான

கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள் இறைச்சிக்கடைகள் என்பவற்றை 1995-ம் ஆண்டு ஜனவரி 1-ம் திகதி தொடக்கம் 1995-ம் ஆண்டு டிசெம்பர் 31-ம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கான கேள்விகள் 6-12-1994-ம் திகதி காலை 10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் நல்லூர் பிரதேசசபை செயலாளரால் கேள்வி வைப்புப்பணம் கேள்விப்பத்திரப்பணம் ஆகியன செலுத்தியகன் பேரில் 24-11 1994 தொடக்கம் 5-12-1994 நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை ''விசேட ஆணையாளர்'' நல்லூர் பிரதேச சபை திருநெல்வேலி என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை ''பிரதேச உதவி உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களம் யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கும கடித உறையில் இடது பக்க மூலையில் குத்தகையின் பெயர் எழுதப்பட்டு அரக்கு முத்திரை இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 06-12-1994 ம் திகதி காலை 10.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது குறித்த நேரத்திற்குமுன் நல்லூர் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் உள்ள கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள 6 12-1994-ம் திகதி காலை 11.00 மணிக்கு தலைமை அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கவும். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தம்முடன் அடையாள அட்டையும் குடும்ப அட்டையும் தவறாது கொண்டு வருதல் வேண்டும். தனியார் காணிகளில் இறைச்சிக்கடை நடாத்துவதற்கு காணிச்சொந்தக்காரரிடம் இருந்து சம்மதக் கடிதம் பெற்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேச சபையின தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அட்டவணை

	குத்தகை விபரம்	மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம்	மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம்	மதிப்பீட்டுத் தொகை
1.	திருநெல்வேலி மத்திய சந்தை	200/-	2500/-	276100/-
2	திரு. சந்தை துவி. ச. வ. பாதுகாப்பு நிலையம்	200/-	500/-	8250/-
3.	கொக்குவில் ஆடியபாதம் சந்தை	200/-	1000/-	16500/-
4.	திரு. சந்தைஆட்டிறைச்சிக்கடைஇல1.	200/-	3000/-	34100/-
5.	திரு. சந்தைஆட்டிறைச்சிக்கடைஇல2.	200/-	3000/-	34100/-
6.	327, பலாலி வீதி, ஆ. இ. கடை	200/-	3000/-	16610/-
7.	கோயில் தோட்டம் மா இ. கடை	200/-	3000/-	5610/-
8.	கோண்டாவில்குமார்வீதி.மா இ.கடை	200/-	3000/-	5610/-
9.	இணுவில் மஞ்சத்தடிமா இ. கடை	200/-	3000/-	22110/-
10.	ஆ/சந்தை ஆ. இ. கடை	200/-	3000/-	19030/-
11.	ஆ/சந்தை மா. இ கடை	200/-	3000/-	22110/-
12.	கொக்குவில் உப-அலுவலக மா. இ: கடை	200/-	3000/-	19910/-
13.	கொக்குவில் உ. அ மா. இ. கடை	200/-	3000/-	34100/-
14.	கோண்டாவில ஸ்ரேசனடிமா. இ கடை	200/-	3000/-	4235/-

திருமதி கமலா சிவசிதம்பரம்
விசேட ஆணையாளர்,
நல்லூர் பிரதேசசபை.

நல்லூர் பிரதேசசபை
திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.
18-11-94

(சி-10747]

அனர்த்தங்களினால் ஏற்படும் அழிவுகளை புனரமைக்கும் போது நீண்டகால பொருளாதார வளர்ச்சி முக்கியமானதாகிறது

அவசரகால புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டத்தின் ஆரம்பம் அதனது செயற்பாடு, அவசர புனரமைப்பு அபிவிருத்தித் திட்டம் 11 என்பன பற்றி சில விடயங்களை உங்கள் முன்வைக்க விரும்புகின்றேன். உலகின் பல நாடுகளில் அனர்த்தங்கள் ஏற்பட்டு வருவது உங்களுக்குத் தெரியும்; இவ் அனர்த்தங்கள் அதிகமாக இயற்கைக் காரணிகளால் பூமியதிர்ச்சி, வெள்ளம், எரிமலை வெடிப்பு, சூறாவளி, வரட்சி போன்ற காரணிகளால் ஏற்படுகின்றன. இதனைப் போலவே மனிதக் காரணிகளால் ஏற்படும் சிவில் யுத்தம், தொழிற்சாலை விபத்துக்கள் என்பவற்றாலும் அனர்த்தங்கள் ஏற்படுகின்றன இவ் அனர்த்தங்களின் பாதிப்புக்கள் பின்வரும் வழிகளில் காணப்படும்.

01. உயிரிழப்புக்கள் / உடல் ஊனமடைதல், அதன் மூலம் உழைக்கும் திறன் குறைதல் / இல்லாது போதல்.

02. வீடுகள், கல்வி, சுகாதார கட்டுமானங்கள் அழிவு.

03 வருமானம் இழப்பு, அதாவது உழைப்புக்கான வசதிகள் குறைவடைவதால் வேலையின்மையும் ஏற்படல்.

04. மக்களுக்குத் தேவையான அத்தியாவசியத் தேவைகளான நீர் வழங்கல், வடிகால் அமைத்தல், தொடர்பு சாதனங்கள், போக்குவரத்து, மின்சாரம், ஆகியவற்றின் தேவைகள் இடைநிறுத்தம்.

05. உணவுப் பொருட்கள், விவசாய கைத்தொழில்களின் மூலம் பொருட்களானது தட்டுப்பாடு என்பன ஏற்படுதல் என்பனவாகும்.
06. மக்கள் இடம்பெயர்வு.

அபிவிருத்தியில் ஏற்படும் பாதிப்பு

01. வளங்களது அழிவு / இழப்பு.
02. குறுகியகாலத் தேவைகளுக்காக நீண்டகால அபிவிருத்தித்திட்டங்கள் தடைப்படல். வளங்கள் மாற்றுபயோகத்திற்காகப் பயன்படல்.
03. முதலீட்டு முயற்சிகளுக்கான ஊக்கமின்மை
04. முறைசாரா துறைகளில் ஏற்படும் பாதிப்பு

அபிவிருத்தி என்னும் பொழுது அதற்குத் தேவைப்படுவது:

01. சமூகத்தின் அடிப்படை மாற்றமாகும் இது
 (அ) நிறுவன ரீதியாகவும்
 (ஆ) அடிப்படையிலும் ஏற்படுவது
 இது பொருளாதார அபிவிருத்தியை அதிகரிப்பதாகும்.
02. வருமான சமமின்மையைக் குறைத்தல்.
03. வறுமையை ஒழித்தல்.

எனப் பல்வேறு அம்சங்களைக் கொண்டதாகும் எனவே, அனர்த்தங்களும், அபிவிருத்தியும் ஒன்றுக்கொன்று முரண்பாடனவைகளாகும்.

ஆனால், அனர்த்தங்கள் காரணமாக ஏற்படும் அழிவுகள் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தும் பல காரணிகளை உருவாக்குவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

01. பாதிப்படைந்த பிரதேசத்தில் ஓர் மாற்றத்துக்கான சூழலை ஏற்படுத்துகின்றது.
02. அபிவிருத்திக்கான தேவையை இனம் காட்டுகின்றது. இதற்கு தொழிற் பயிற்சி, அழிந்த வீடுகளை புனரமைக்கும் திட்டம் என்பவற்றை உதாரணமாகக் கொள்ளலாம்.
03. மக்களது பங்குபற்றலில் ஊக்குவிக்கின்றது/ அவசியமாகின்றது.
04. புதிய வேலைவாய்ப்புக்கான தேவையை உருவாக்குகின்றது.

எனவே தான் தற்போதைய திட்டமிடலாளர்கள், அனர்த்தங்களினால் ஏற்பட்ட அழிவுகளை மையமாகக் கொண்டு, இவ் அழிவுகளை புனரமைக்கும் பணியைத் திட்டமிடும் பொழுது நீண்டகால பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் செய்து வருகின்றார்கள். இதனை நாம் பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற எரிமலை வெடிப்பின் போது ஏற்பட்ட பாரிய இழப்புக்களை புனர் நிர்மாணம் செய்யும் பொழுது நிதர்சனமாக கையாண்டு வருவதைக் காணக்கூடியதாகவிருக்கின்றது.

இந்த அடிப்படையில் அதாவது புனரமைப்பும் அபிவிருத்தியும் என்பது நாம் எண்ணும் பொழுது எமதுபிரதேசத்தைஎமது மனங்களின் முன் கொண்டு வரும்பொழுது1983ஆம்ஆண்டுதொடக்கம் தொடர்ச்சியாகஏற்பட்டுவந்தஇராணுவவன்செயல்காரணமாக வடக்கு - கிழக்கு பிரதேசம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அனர்த்த அழிவுகள் எல்லாவற்றையும் இப்பிரதேச மக்கள் சந்தித்துள்ளனர் / பாதிப்படைந்துள்ளனர். எனவே, அழிவுகள், அபிவிருத்தி, பிரதேசம் என்ற மூன்று குறிக்கோள்கள் அல்லது பண்புகளைக் கவனத்திற் கொண்டு எமது பிரதேசத்தின் மாவட்டத்தின்புனரமைப்புத் திட்டத்தை தயாரிக்கவேண்டிய நிலையிலுள்ளோம்.

இந்நிலையில் கடந்த 10 வருட கால பொருளாதார அபிவிருத்தியை வடமாகாணத்தில் கவனத்தில் எடுத்தால் பின்வரும் பண்புகள் தெளிவாகின்றன.

01. இலங்கையின் மற்றைய மாவட்டங்களில், மாவட்ட அபிவிருத்திக்காக கொண்டுவரப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் பூரணமாக செயற்படுத்தப்பட்டன. ஆனால், மன்னார், வவுனியா மாவட்டத்தில் செயற்படுத்த ஆரம்பிக்கப்பட்ட பொழுதும் இடைநிறுத்தப்பட்டன மற்றைய மாவட்டங்களில் திட்டம் தயாரிக்கும் நிலையிலிருந்தே நிறுத்தப்பட்டது.

02. மற்றைய மாவட்டங்களைப்போல விசேட செயற்திட்டங்கள் இனம் காணப்பட்டு நிதி பெறப்பட்டும் அத்திட்டங்கள் கைவிடப்பட்டன. அல்லது நிதி மற்றைய மாவட்டங்கள்/ திட்டங்களுக்கு மாற்றப்பட்டன. இதற்கு உதாரணமாக பாரிய நீர்ப்பாசன அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் இலங்கையில் 7 பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களை புனரமைப்பதற்கான 5 வருடத் திட்டம் 1984 ஆம் ஆண்டில் மற்றைய மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு இரணமடுத்திட்டத்தில் மாத்திரம் இடையில் கைவிடப்பட்டது:

03. ஏற்கனவே, பல படிமுறை வளர்ச்சியின், முதலீடுகளின் கீழ் செய்யப்பட்ட பொருளாதார, உட்கட்டுமானங்கள், சமூக உட்கட்டுமானங்கள், குடியிருப்புக்கள், மரப்பயிர்ச் செய்கைகள் அழிக்கப்பட்டன.

04. அழிக்கப்படாது மீதமாகவிருந்த பொது பொருளாதார உட்கட்டுமானங்கள், தனியார் உற்பத்திக் கட்டுமானங்கள், குடியிருப்புக்கள் என்பன போதிய அரச நிதி பராமரிப்புக்கு கிடைக்காமை, பராமரிப்பிற்கான பொருட்கள் தடைவிதிக்கப்பட்டமை என்பன மீதமாகவிருந்த கட்டுமானங்களும் மீள அபிவிருத்திச் செயற்பாட்டுக்குள் கொண்டுவரப்பட முடியாத நிலைமையை ஏற்படுத்தியது.

இந்நிலையில் கடந்த பத்தாண்டுகளுக்கான இலங்கையின் பொருளாதார சராசரி வருடாந்த வளர்ச்சி வீதம் 4% ஆக கணிக்கப்பட்டிருப்பினும், இவ் வளர்ச்சியின் பிரதிபலிப்பு மேற்கு மாகாணத்தில் கூடிய வளர்ச்சி வீதத்தையும், மற்றைய மாகாணங்கள் குறைந்த வளர்ச்சி வீதத்தையும் கொண்டிருப்பதை அவதானிக்கும் பொழுது நாட்டின் வளர்ச்சி மாகாணங்களுக்கிடையே சரியாகப் பகிரப்படாமல் இருப்பது மாத்திரமல்ல, வளர்ச்சி வீதத்திலும் பார்க்கக் கூடியளவுக்கு எமது அனர்த்தங்களது அழிவுகள் காணப்படுகின்றன.

ஓர் உத்தியோக பூர்வமற்ற (UNICEF) மதிப்பீட்டின் படி நாம் இம்மாவட்டங்களில் இலங்கையின் வளர்ச்சியில் 20 வருடங்கள் பின்தங்கியுள்ளதாக அறியப்படுகின்றது. இப்பின்னணியில் விவசாயம், கடற்றொழில், கைத்தொழில், சேவைத்துறை எல்லாவற்றிலும் நாம் தற்பொழுதே அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. எனவே, இப்பாரிய இடைவெளியை ஈடுசெய்து ஸ்ரீலங்காவின் வளர்ச்சியை அடைய வேண்டுமாயின் எமது வருடாந்த வளர்ச்சி வீதம் கட்டாயம் ஸ்ரீலங்காவின் வளர்ச்சி வீதத்திலும் பார்க்க இருமடங்காக இருக்க வேண்டியது அவசியமாகும். இந்த அடிப்படையே தற்பொழுது ஆராயப்படவிருக்கும் இரண்டாம் கட்ட புனரமைப்பு அபிவிருத்தித் திட்டமாகும்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணல் என்றஆய்வுப்பட்டறையில் கலந்து கொண்டு புனருத்தாரண அபிவிருத்தித்திட்டங்களை இனங்காணல் என்ற தலைப்பில் யாழ். செயலகத்தின் புனர்வாழ்வுத் திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் ஆற்றிய தலைமையுரையை இங்கு தருகின்றோம

இந் நிலையில் கடந்த 7 வருடங்களாக செயற்பாட்டிலிருந்த அவசர புனர்வாழ்வு,புனரமைப்புச் செயற்திட்டத்தையும், அதன் கடந்த கால செற்பாட்டினையும் மதிப்பீடு செய்தல் அவசியமாகும். அதனது படிப்பினையே இரண்டாம் கட்ட திட்டத்தின் தேவைகளை இனங்காணல், திட்டத்தைத் தயாரித்தல், இலக்குகளைத் தீர்மானித்தல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றுக்கு முக்கியமானதாகும்-

1987 ஆம் ஆண்டு யூலையில் கையொப்பமிட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினை அடுத்து வடக்கு கிழக்கு மாகாணங்களது ஓர் அவசரகால புனரமைப்புத்திட்டம்,பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் பொருளாதார, சமூக உட்கட்டுமானங்களை புனரமைப்பதற்காக தயாரிக்கப்பட்டு 493 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உடையதாக இத்திட்டம் இருந்தது இத்திட்டத்தால் யாழ் மாவட்டத்திற்கு ஆரம்பத்தில் இனங் காணப்பட்ட துறைகள் பின்வருமாறு.

	துறை	தொகை(மில்லியன் ரூபா)
01.	வீடமைப்பு	1043 40
02.	வீதிகள்/பாலம்	375.00
03.	விவசாயம்	725 00
04.	கடற்றொழில்	233.00
05.	தொழில்நுட்பம்	414.30
06.	கல்வி	142.85
07.	சுகாதாரம்	34.93
08.	போதனா வைத்தியசாலை	6.57
09.	நீர்ப்பாசனம்	6.00
10.	நீர்விநியோகம்	89 00
11.	கூட்டுறவுச்சங்கம்	138.20
12.	வர்த்தகம்	542 70
		3750-95

ஓர் புனரமைப்பு அபிவிருத்தித்திட்டத்தை தயார் செய்யும்பொழுது பின்வரும் விடயங்களை கவனத்தில் எடுப்பது பொது வழக்கமாகும்- அவையாவன:

01. தேவைகளை மதிப்பிடல்.
02. நோக்கங்களை ஏற்படுத்தல்.
03. இலக்குகளை தீர்மானித்தல்.
04. அதற்கான கொள்கையை வகுத்தல்.
05. பொது தேவைகளது அமைப்பை உருவாக்கல்.
06. திட்டத்தை செயற்படுத்தல்.
07. அளவிடல், மதிப்பிடுதல் என்பனவாகும்.

ஆனால், எமது அனுபவத்தைக் கொண்டு அவதானித்த பொழுது முதலாவது அவசரகால புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டம் தயாரிக்கும் பொழுது இலக்குகளை தீர்மானிக்கும் போதும் அதற்கான மற்றைய படிமுறைகளின் பொழுதும், உண்மையான நிலைகள் அவதானிக்கப்படாமை, பாதிக்கப்பட்ட மக்களது புனரமைப்பு அவர்களுக்கான அபிவிருத்தி பற்றிய கூடியளவு அக்கறை காட்டப்படவில்லை. இது காலக்கிரமத்தில் ஒதுக்கப்பட்ட நிதி அம்மாவட்டங்களுக்குப் பதிலாக மற்றைய மாவட்டங்களுக்கு திருப்பப்பட்டு செலவு செய்யப்பட்டது

பொதுவாக இத்திட்டம் பற்றிய மதிப்பீடு பின்வருமாறு அமைந்துள்ளது;

01. திட்டம் நடைமுறையிலிருந்தாலும் இம்மாவட்டங்களுக்கான பொருட்களை கொண்டு செல்வதற்கான கட்டுப்பாடு இருந்தமை. இத் திட்டத்தை செயற்படுத்த முடியவில்லை
02. நிர்வாகத்துறையில் ஏற்பட்ட பல மாற்றங்கள், சிக்கல்கள் இத்திட்டத்தை இலகுவில் நடைமுறைப்படுத்த முடியவில்லை.
03. வரையறுக்கப்பட்ட நிதி காரணமாகவும், இறுக்கமான நடைமுறை காரணமாகவும் இருப்பிடங்களைத் திருத்துவதற்கான உதவிகள் பூரணமாக பெறமுடியவில்லை.
04. கட்டட மூலப்பொருள் தட்டுப்பாடும், ஒப்பந்தகாரர், தொழில்நுட்பவியலாளர்,பயிற்றப்பட்ட தொழிலாளர்களுக்கான தட்டுப்பாடு.
05. தொடர்பு வசதிகளின்மையும், போக்குவரத்து வசதியின்மையும்.
06 நிர்வாகிகளுக்கும் ஆயுதபடையினருக்குமிடையே ஏற்பட்ட சுமுகமற்ற தொடர்பு.

07. திருப்தியற்ற ஒருங்கிணைப்பும், மேற்பார்வையும்.

08. எல்லாத் தரத்திலும் தேவையான பயிற்றப்பட்ட தொழிலாளர் இல்லாமை.

09. திட்டங்கள் நெகிழ்வுத்தன்மையுடையனவாகவும், அப்பிரதேச தேவையை நிறைவேற்றுபவையாகவும் பூரணமாக இருக்கவில்லை.

10. திட்டங்களை நிறைவேற்றும் மாவட்ட நிலை உத்தியோகத்தருக்கு அடிப்படை தேவைகளை திட்டமிடலுக்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

11. அரசியல் சூழ்நிலை பொருளாதார அபிவிருத்திக்கான புனரமைப்பை செயற்படுத்துவதற்கானதாகவிருக்கவில்லை.

இது இத்திட்டம் வடக்குகிழக்கு மாகாணங்களில் பூரணமாக செயற்படுத்த முடியாமல் போவதற்கு காரணமாகவிருந்தது. உதாரணமாக யாழ் மாவட்டத்தில பொதுக்கட்டடம், வீதிகள் அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட நிதியின் உபயோகத்தை அவதானிக்கலாம்,

	செயற்படுத்தும் நிறுவனம்	ஒதுக்கிய நிதி	அங்கீகரிக்கப்பட்ட திட்டம்	செலவுத் தொகை	விதம்
1.	யாழ் மாநகரசபை	85,000,000	61,009,260	33,278,155	39%
2.	சாவகச்சேரி பட்டினசபை	30 000,000	13 320 000	6,559,290	21%
3.	பருத்தி துறை	45,000,000	5,455 000	629,211	1,4%
4.	வல்வெட்டித்துறை	45,000 000	8,337,475	1,858 966	4%
5.	மற்றைய நகரம்	30,000,000	12 645,000	7,297,907	24%
6.	கல்வித்திணைக்களம்	—	181,829,216	65 166 161	35%
7.	கடற்றொழில்	—	12,368,000	2,984 293	24%
8.	கூட்டுறவு	—	31,285,000	5,730,385	18%

இதிலிருந்து பெருந்தொகையான ஒதுக்கப்பட்ட நிதி செலவு செய்ய முடியாத நிலையில் இருந்தமை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

1990ஆம்ஆண்டுயூனின் பின்னர்அவசரகாலபுனரமைப்புத்திட்டத்தின் முதலாம் பகுதி திரும்ப செயற்படுத்தப்பட்டபோதும், இராணுவ கட்டுப்பாட்டுக்குட்பட்ட பிரதேசங்களில் மாத்திரம் அமுல் நடத்தப்பட்டது. இதற்காக 160 மில்லியன் டொலர் செலவிடப்பட்டுள்ளது.

தற்போதைய நிலை

01. தற்பொழுது மொத்தமாக இடம்பெயர்ந்த குடும்பங்கள் பல்வேறு மாவட்டங்களில் தற்பொழுது வாழ்பவர்கள் - 130.000 (யாழ்ப்பாணம் - 79,834)
02 முகாம்களில் வசிக்கும் குடும்பங்கள் - 40,000 [யாழ்ப்பாணம் - 8,968)

விவசாய, கால்நடை உற்பத்தித்துறை பெரும் வீழ்ச்சியைக் காட்டி நிற்கின்றது ஒரு மதிப்பீட்டின் படி விவசாயத்துறையின் 1981 ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்தில் 303 மில்லியன் ரூபாவாகவிருந்த உற்பத்திப் பெறுமதி 1990 ஆம் ஆண்டில் 90 மில்லியன் ரூபாவாக குறைந்துள்ளது அதே நேரத்தில் உள்ளீடுகளுக்குள்ள பாரிய போக்குவரத்துச் செலவும், தடைகளும் விவசாயிகளது உற்பத்திச் செலவை அதிகரித்துள்ளது இதில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட துறை கடற்றுறையாகும் 1983 ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கில் உற்பத்தி 104,318 மெ தொன்னிலிருந்து 1993 ஆம் ஆண்டில் 10,000 மெ தொன்னாகக் குறைந்துள்ளது, இது இத்தொழிலில் ஈடுபட்டுள்ள 58,582 குடும்பங்களையும் எவ்வாறு பாதித்துள்ளதென்பதை ஊகித்துக்கொள்ளலாம்;

அத்தோடு நிரந்தர வருமானம் பெறும் அரச ஊழியர்கள், கூட்டுறவு ஊழியர்கள் தவிர்ந்த சுய தொழில்களில் ஈடுபட்டிருந்த மேசன் தொழிலாளர், தச்சுத் தொழிலாளர், வானத் தொழிலாளர் ஆகிய பல இனத்தவர்கள் தொழில் இழந்த அவர்களது வாழ்க்கை நிலைமை பாதிக்கப்பட்டதோடு அல்லாமல் தொழில் பயிற்சியும், தேர்ச்சியும் கொண்ட இவர்களது தொழில திறமை செயல் இழந்தும் போய் விட்டது.

மக்கள் இடம்பெயர்வு, இருப்பிட வசதியின்மை போன்ற காரணிகள் சமூகத்தின் கட்டமைப்பை பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி இருப்பதோடு, சமூக கட்டுப்பாடுகள், பழக்கவழக்கங்களில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு, மின்சாரமின்மை என்பன மாற்றுச்சக்திப் பயன்பாட்டினை ஊக்குவித்தது. இது கிராமப் புறத்தில் அமைந்த சிறு காடுகள்,மரங்கள், கண்டல் காடுகள் என்பவற்றை அழித்து விறகுகளாக விற்பனை செய்யும் ஒரு புது தொழிலாளர் குழுவை உருவாக்கியுள்ளது. இது பாரிய சூழல் பாதிப்பை ஏற்படுத்தி எதிர்கால சந்ததியினருடையதும் எமது பிரதேசத்தினதும் வளர்ச்சிக்குத் தடையாக அமைந்துள்ளது.

இவ்வாறானதோர் நிலையில் தான் இரண்டாம் கட்ட புனரமைப்பு, புனர்வாழ்வுத் திட்டத்தை தயாரிக்கும் பணியை புனரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சு மேற்கொண்டுள்ளது. அதற்கான நிபுணர்கள் குழு வடபிரதேசத்தின் மாகாணங்களுக்குச் சென்று நிலைமையை அவதானியாது மக்களோடு கலந்தாலோசிக்காது தமது திட்டத்தை தயாரிக்கும் நோக்கத்தை கொண்டது. இச்சந்தர்ப்பத்தில் அவர்களது வருகையின் அவசியத்தையும், மக்களது இழப்புகள், தேவைகளை நேரடி அவதானிப்பு மூலம் இனம் காண வேண்டியதன் அவசியத்தையும், இங்குள்ள திணைக்களத் தலைவர்கள், புத்திஜீவிகள் திட்டத்தை செயற்படுத்துபவர்கள் ஆகியோரது கருத்துக்களை கேட்டறிவதன் அவசியத்தை அவர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக எமது தேவைகளை இனம் கண்டு நாமே அதனை விவாதித்து நமக்குள் தெளிவு பெற்று இலக்கை தீர்மானித்தல் வேண்டும். இது இலகுவான படிமுறையான திட்ட செயற்பாட்டுக்கும், மக்கள் பங்குபற்றுதலுக்கும் வழிவகுப்பதோடு, நீண்டகாலத்துக்கு நிலைத்து நிற்கும் அபிவிருத்தி, புனரமைப்பு திட்டமாகவும் மாற்றமடையும் என எண்ணுகின்றேன்.

இதன் அடிப்படையில் (1) விவசாயம், கால்நடை, சூழல், (2) கடல் வளம். (3) பொருளாதார உட்கட்டுமானங்கள், (4) சமூக உட்கட்டுமானங்கள், (5) நகரத்திட்டமிடல், (6 மக்கள் குடியிருப்புகள், (7) கைத்தொழில், (8) அரச சார்பற்ற நிறுவனங்கள் (9) சந்தைப்படுத்தலும், விநியோகமும் நிதி நிறுவனங்களும், ஆகிய ஒன்பது துறைகளாக பிரிக்கப்பட்டு அரச சேவையாளர்களும், அவ்வத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களுமாக தமது துறை சார்ந்த புனரமைப்பு அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகளை உங்கள் முன்வைக்க இருக்கிறார்கள். இவ் விடயத்தில் தங்கள் கருத்துக்களை இந்தப் பிரதேசத்தின் நன்மை மக்களது நல்வாழ்க்கை கருதி தெரிவிக்கும்படியும் கலந்துரையாடல் குழுநிலை கலந்துரையாடலில் தங்களது பங்குபற்றலை பூரணமாக எதிர்பார்க்கின்றோம்

இந்நிலையில் இத்திட்ட முன்மொழிவுகள் நாம் முன்னர் குறிப்பிட்ட படி:

(அ[புனரமைப்பு

(ஆ) அபிவிருத்தி

(இ) ஒன்றிணைக்கப்பட்ட துறைசார் பிரதேச, மாவட்ட அபிவிருத்தி

(ஈ) மாவட்டம், மாகாணம் சார் திட்டமிடல் என்பது முக்கியமான படிமுறையாகவுள்ளது இதில் குறிப்பிடக்கூடிய அம்சங்களாக;

 (அ) பிரதேச திட்டமிடலினது ஆரம்ப நடவடிக்கையாக இக்கலந்துரையாடல் மூலம் ஏற்படுத்தப்படும் அணுகுமுறை எதிர்காலத்தில் வலுப்பெறும நடவடிக்கையாக அமையும்.

 (ஆ] இதில் பங்குபற்றிய மற்றும் அரச ஊழியர்கள் தமக்குள தமக்கு தெரியாமலே இருந்துவந்த திறமையை வெளிக்கொண்டுவந்து எதிர்கால ஒளிமயமானதோர் சேவைக்கு எதிர்வு கூறி நிற்கின்ற நிலை அவதானிக்ககூடியதாகவுள்ளது.

 [இ] மூன்றாவதாக கடந்த நான்கு வருடங்களாக அரசசார்பற்ற நிறுவனங்களும், அரச திணைக்களங்களும் இயங்கி வந்த முறை பாராட்டுக்குரியதும், மற்றைய மாவட்டங்கள், நாடுகளுக்கு முன்னுதாரணமாகவும் அமைந்துள்ளது இந்நிலை தொடர் புனரமைப்பு, அபிவிருத்தி நடவடிக்கைகளில் இணைந்து பணியாற்றும் ஓர் நிலையைகாணக் கூடியதாகவுள்ளது.

(ஈ) இறுதியாக அரசியல் ஸ்திரதன்மையும், அங்கீகாரமும், பங்குபற்றலும் இல்லாது விடின் எந்தத்திட்டமும் செயற்படுத்த முடியாதென்பது எமக்கு அனுபவம் அந்த நிலை மாற்றமடைந்து இந்த திட்டமுறை தயாரித்தல் இக்கருத்தாளர்களை ஒழுங்குபடுத்துதல், அதன் முன்னேற்றத்தை நாளதோறும் மேற்பார்வையிட்டு நம்மை ஊக்குவித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளருக்கும் மற்றைய பொது முகாமையாளர்கள், பொருண்மிய மதியுரைக்குழு அங்கத்தவர்கள் ஆகியோரது பங்குபற்றல் எமக்கு புதுத்தென்பையளிக்கின்றது. இவற்றுக்கெல்லாம் உற்சாகமாக மூத்த தலைவர்கள்இன்று வந்து இதனை ஆரம்பித்து வைப்பது, கருத்துரை வழங்கவிருப்பது நாம் ஆரம்பித்துச் செல்லும் இம் முயற்சி வெற்றி பெறும், செயலாக்கம் பெறுமென எண்ணுகின்றேன்.

'பபதா' தரையிறக்கும் கப்பல்தாக்குதல் விசாரணைக் குழு அமைப்பு

ஏனைய கடற்படைக் கப்பல்கள் உஷார் படுத்தப்பட்டன

(கொழும்பு)

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் பபதா தரையிறக்கும் கப்பல் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கு கடற்பிரதேசங்களில் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும் சகல கடற்படைக் கப்பல்களும், கடற்புலிகளின் தாக்குதல்கள் குறித்து உஷார்படுத்தப்பட்டுள்ளன என கடற்படை உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்;

அண்மைக்காலங்களில் கடற்புலிகளின் தாக்குதல்களால் பல கடற்படைக் கலங்களை, சிறிலங்கா கடற்படை இழந்திருப்பதையடுத்து இவ் உஷார் படுத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெற்றிலைக் கேணி கடற்பரப்பில் வைத்து விடுதலைப்புலிகளால் தாக்கப்பட்ட "பபதா" தரையிறக்கும் கப்பலின் சேதவிபரங்கள் பற்றி ஆராய விசேட விசாரணைக் குழு ஒன்றையும் கடற்படை உயர் பீடம் அமைத்துள்ளது.

வெற்றிலைக் கேணியில் இக் கப்பல் தாக்குதல் நடந்த சமயம் நிறுத்தப்பட்டதற்கு வடக்கிலுள்ள உயர் கடற்படை கட்டளையிடும் அதிகாரியின் உத்தரவே காரணமென ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை, தாக்கப்பட்ட கப்பல் 1985 ம் ஆண்டு கடற்படைக்காக 65 மில்லியன் ரூபாவுக்கு, கொள்வனவு செய்யப்பட்டதாகவும், தற்போது இதன்பெறுமதி 100மில்லியன் ரூபாவாக இருப்பதாகவும் கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் படையினருக்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களை வழங்கி வந்த மேற்படி தரையிறக்கும் கப்பல் சேதத்துக்குள்ளாகியிருப்பது. படையினருக்கான பொருட்கள் வழங்கலை சிரமப்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'பபதா' கப்பல் சிப்பாய்க்கு பதவி உயர்வு வழங்கல்

(கொழும்பு)

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் விடுதலைப்புலிகளால் தாக்கப்பட்ட 'பபதா' தரையிறக்கும் கப்பலில் கடமையிலிருந்த கடற்படை சிப்பாய் ஒருவர் பதவி உயர்த்தப்பட்டுள்ளார் விடுதலைப் புலிகளின் படகுகள் நெருங்கி வருவதை இவர் அவதானித்ததாகவும், அதனாலேயே கப்பலில் இருந்தவர்கள் உயிர் தப்பமுடிந்ததெனவும் கூறியே இவருக்குதலைமைக்கடலோடியாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது

வெளிநாட்டுவேலைமோசடி முகவர் மீது நடவடிக்கை

பிரதமர் சிறிமாவோ தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு வேலை வாய்ப்புமோசடிமுகவர் நிலையங்கள் மீது தான் கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாக சிறிலங்கா பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

சென்ற பல வருடங்களாக இம் முகவர் நிலையங்கள் பல மோசடிகளை மேற்கொண்டு வந்துள்ளதாகவும் இதனால் பலர் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர் தொடர்ந்து இந் நிலை நீடிக்க தம்மால் அனுமதிக்க முடியாது என மேலும் அவர் குறிப்பிட்டார்.

மூன்று பெண் சகாக்களை கொழும்பில் பொலிஸ் தேடுகிறது

தற்கொலைப் பெண்ணுடன் தொடர்பாம்

(கொழும்பு)

காமினி திசாநாயக்கா கொல்லப்படக் காரணமான தற்கொலை பெண்ணிற்கு நெருக்கமான வேறு மூன்று பெண்கள் இன்னமும் கொழும்பில் தான் நடமாடுவதாக பொலிசார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்,

சிதேவி, ஞானா, கமலா தேவி என்ற பெயர்களைக் கொண்ட இந்த மூன்று பெண்களுக்கும் கிராண்பாஸில் குண்டை வெடிக்கச் செய்த தற்கொலைப்படை கொலையாளிக்கும் தொடர்பு இருப்பதாகவும் இவர்களை தற்போது பொலிசார் தேடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்கொலைப் பெண்ணின் செருப்புகள் நீதிமன்றில்

(கொழும்பு)

பாலத்துறைக் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட காமினி திசாநாயக்காவின் கொலைக்கு காரணமென கருதப்படும் தற்கொலையாளிப் பெண்ணின் செருப்புகள், இரகசியப் பொலிசாரினால் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, தற்கொலையாளிப் பெண்ணின் பல ஆதாரப் பொருட்கள் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டு விட்டதாக இரகசியப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

வேலியே பயிரை...

யாழ் போதனா மருத்துவமனை முன்பாக உள்ள பூந்தோட்டத்திலிருந்து பெறுமதிமிக்க அழகு தாவரம் ஒன்று பராமரிப்பாளரினால் பிடுங்கிச்செல்லப்பட்டுள்ளது.

சுமார் மூவாயிரம் ரூபா பெறுமதிமிக்க இந்த அழகு கொண்ட மலைநாட்டு செடி காணாமல் போயிருந்தமை கண்டு எமது நிருபர் பாதுகாப்பு ஊழியர்களிடம் கேட்டபோதே அச்செடி அந்த பூந்தோட்டத்தை பராமரிப்பவரால் பிடுங்கிச் செல்லப்பட்டமை தெரிய வந்துள்ளது.

பாதுகாப்புகட்டமைப்புமாற்றம்குறித்து அரச உயர் மட்டத்தில் ஆராய்வு

(கொழும்பு)

சிறிலங்காவின் பாதுகாப்புத்துறை உயர்பீட கட்டமைப்பில் மாற்றங்கள் செய்வது தொடர்பாக அரச உயர் மட்டத்தில் தற்போது ஆராயப்பட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொதுஜன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்ததும் பாதுகாப்பு கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்த திட்டமிட்டிருந்தாயினும் பாதுகாப்பு அமைச்சு முன்னாள் ஜனாதிபதி டி. பி விஜேதுங்க வசமிருந்தமையால் அது கைகூடவில்லை. தற்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கீழ் பாதுகாப்பு அமைச்சும் முப்படைகளும் வந்துள்ளதால் இக்கட்டமைப்பு மாற்றங்களை மேற்கொள்ள அரசு திட்டமிட்டு வருவதாகவும் இது குறித்து தற்பொழுது அரச உயர்மட்டத்தில் ஆராயப்படுவதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த கால அரசியல் மோசடிகள், குற்றச் செயல்கள் மனித உரிமை மீறல்கள் என்பவற்றில் சம்பந்தப்பட்ட படை அதிகாரிகளும் அரசுடன் ஒத்துழைக்க மறுக்கும் அதிகாரிகளும் பதவிகளிலிருந்து விலக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது. இவ்வதிகாரிகளில் பலர் ஓய்வு பெறும் கால எல்லையான அறுபது வயதை அடைந்தவர்களாக அநேகமாக இருப்பதாலும் பலர் சேவை நீடிப்பில் உள்ளதாலும் இவர்கள் பதவியிலிருந்து கட்டாய ஓய்வில் செல்ல பணிக்கப்படவுள்ளனர் வடக்கு கிழக்கில் பணியாற்றிய சில அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க பொலிஸ்மா அதிபர் பிராங் டி சில்வா ஆகியோர் பதவி விலக்கப்படலாம் என கடந்த வாரம் செய்திகள் வெளியாகியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

புலிகளுக்கு வந்த ஆயுத கப்பல் வழிமாறி சென்று விட்டதாம்

கொழும்பில் பாதுகாபபு அதிகாரிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு 10 தொன் ஆயுதங்கள் இலங்கை நோக்கி வந்த கப்பல் வழிமாறி சென்றுவிட்டதாக கொழும்பில பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்

மேற்காசிய நாடு ஒன்றிலிருந்து விடுதலைப்புலிகளுக்கு கப்பல் ஒன்றில் 10 தொன் ஆயுதம் வருவதாகவும் இக் கப்பலை தடுத்து நிறுத்த இந்தியாவின் உதவியை முக்கியமாக கோரப்பட்டதாகவும் முன்னர் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியிருந்தமை தெரிந்ததே திசைமாறி சென்றுவிட்ட இந்த ஆயுதக்கப்பல் எங்கு சென்றதென்பது குறித்து தகவல் இல்லை என்றும அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சகல இராணுவ நிலைகளும் உஷார் படுத்தப்பட்டுள்ளன

மாவீரர் தினத்தையொட்டி எச்சரிப்பு

(கொழும்பு)

இன்று ஆரம்பமாகும் மாவீரர் வாரத்தையொட்டி விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்தலாம் என எதிர்பார்க்கப்படுவதால் வடக்கு-கிழக்கில் இராணுவ நிலைகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வருடம், இதே காலப் பகுதியில பூநகரி- நாகதேவன் துறை முகாம் மீது புலிகள் தாக்குதல் நடத்தியதை அப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

முன்னாள் அமைச்சர்களை விசாரிக்க அனுமதி

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்களின் சொத்துக்கள் தொடர்பாக பூர்வாங்க விசாரணை மேற்கொள்ள சபாநாயகர் அனுமதி வழங்கியுள்ளார்.

லஞ்ச ஊழல் மற்றும் சொத்து தொடர்பாக விசாரணை மேற் கொள்ளுவதற்கு முன்னோடியாக இவ் விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகவும் இதற்கு சபாநாயகர் கே.வி. ரட்நாயக்க அனுமதி வழங்கியிருப்பதாக தெரிவித்துள்ளார்.

மனிதபுதைகுழிகள் குறித்த மருத்துவ அறிக்கை வரும்

(கொழும்பு)

அண்மையில் தோண்டப்பட்ட புதைகுழிகள் தொடர்பான பூர்வாங்க சட்டமருத்துவ அறிக்கை விரைவில் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. சூரியகந்த, இறக்குவானை, ஹொக்காவ கந்தரை, மினுவாங்கொடை ஆகிய இடங்களில் தோண்டி எடுக்கப்பட்ட உடற்பாகங்கள் கொழும்பில் உள்ள பிரதம சட்டமருத்துவ அதிகாரியினால் ஆராயப்பட்டு வருகிறது

சகல விசாரணைகளும் பூர்த்தியாக்கப்பட்டு இவ்வருட இறுதிக்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுவிடும் என பிரதம சட்டவைத்திய அதிகாரி கூறியுள்ளார்

திருட்டு

(வடமராட்சி)

பருத்தித்துறை தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவி ஆச்சிரமத்தில் பாவனைக்கு இருந்த 15 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த நீர் இறைக்கும் இயந்திரம் இனம் தெரியாதவர்களினால் கடந்த புதன்கிழமை இரவு திருடப்பட்டுள்ளது இது பற்றி ஆச்சிரம சுவாமி சித்ருபானந்தா பருத்தித்துறை காவல்துறையில் புகாரிட்டுள்ளார்; (யோ)

அரசியலமைப்பு திருத்த சட்டம் சர்வசன வாக்கெடுப்பு நடக்கும்

(கொழும்பு)

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதை முக்கிய நோக்கமாகக்கொண்ட அரசியலமைப்பு சீர்திருத்தத்தை ஐ. தே.க.எதிர்த்தால் மக்கள் கருத்தறியும் சர்வசன வாக்கெடுப்பை அரசு நடத்தும் என அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ் தெரிவித்தார்.

அரசியலமைப்பு சீர் திருத்தப் பிரேரணை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் போது அதை பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. கவும் ஏற்று வாக்களித்தால் சபையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அது ஏற்றுக்கொள்ளப்படும். அவ்வாறில்லாது பிரேரணையை சபையில் எதிர்க்கட்சிகள் எதிர்த்தால் சர்வசன வாக்கெடுப்பு தவிர்க்க முடியாததாகிவிடும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

பதவி வெற்றிடம்

கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

01. கணக்காளர்:

குறியீட்டு இலக்கம்: 104.9
சம்பளத் திட்டம்: 1165/= - 60×3 - 75×11 - 2170/=
தகைமைகள் :

கூட்டுறவு பணியாளரின் 10-வது சம்பளத்திட்டத்தின் கணக்குப் பதிவாளர்/கணக்கு அல்லது கணக்காய்வு லிகிதர் பதவியிலான 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11-வது சம்பளத்திட்டத்திலான கணக்கு பதிவாளர்/கணக்கு அல்லது கணக்காய்வு லிகிதர் பதவியிலான 6 வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

ஐக்கியராச்சியத்தில் கணக்கு பதிவாளர் இறுதித்தேர்வுடன் அங்கீகரிக்கப்பட்ட வாணிப/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வுத் துறையில் 2 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சிய கணக்குப்பதிவாளர் இடைநிலைத் தேர்வுடன் அங்கீகரிக்கப்பட்ட வாணிப/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் அல்லது /கணக்காய்வுத்துறையில் 2 ஆண்டுகள் மேற்பார்வை மட்டத்திலான 4 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உ/த), க. பொ. த. (உ/த) த்தில் கணக்கியல் உட்பட 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வுத்துறையில் மேற்பார்வை பதவி தரத்தில் 4 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம்

02. மேற்பார்வையாளர்:

குறியீட்டு இலக்கம்: 209 - 10
சம்பளத்திட்டம்: 1045/= - 40×4 - 50×10 - 1705/=
தகைமைகள்:

கிளைமுகாமையாளர் தரத்தில்/மேற்பார்வைத்தரத்தில் 11-வது சம்பளத்திட்டத்தில் 2 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவு பணியாளர் தராதரப்பத்திரம் (சா.த)/க.பொ.த (சா.த) பரீட்சையில் கணிதம்/ வர்த்தககணிதம்.தமிழ்/ சிங்களம் மொழி உட்பட 4 திறமைச்சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் இத்துறையில் 2 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம்.

03. இலிகிதர்:

குறியீட்டு இலக்கம்: 302.10
சம்பளத்திட்டம்: 1005/= - 40×5 - 50×10 - 1705/=
தகைமைகள்:

எழுதுனர் தரங்களில் கூட்டுறவுப்பணியாளர் 11-வது சம்பளத்திட்டத்தில் 2 ஆண்டுகளுக்குக்குறையாத அனுபவம் அல்லது 12-வதுசம்பளத்திட்டத்தில் 4 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம்,

அல்லது

கணிதம்/ வர்த்தககணிதம்/ எண்கணிதத்துடன், தமிழ்/சிங்கள மொழிகள் உட்பட 5 திறமைச்சித்திகளுடனான க.பொ.த (சா.த) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியுடன் கூட்டுறவுச்சங்கம் ஒன்றில் எழுதுனர் பதவியில் 2 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திரம் (உ/த), க.பொ.த (உ/த)த்தில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தி.

அல்லது

ஐக்கிய ராச்சியத்தின் கணக்குப்பதிவாளர் இடைநிலைத்தேர்வு

04. கிளை விற்பனையாளர்:

குறியீட்டு இலக்கம் : 307. 11
சம்பளத்திட்டம் : 905/= - 40×5- 50×10 - 1605/=
தகைமைகள் :

கூட்டுறவுப்பணியாளர் 12வது சம்பளத்திட்டத்தில் 2 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம் அல்லது க. பொ. த (சா. த) த்தில் சித்தியுடன் விற்பனையாளர் துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஓராண்டுக்குக் குறையாத அனுபவம்,

குறிப்பு:

01. சங்க பணியாளர்களுக்கு உரித்தான மேலதிகபடிகளும் வழங்கப்படும்
02. சங்க பணியாளர்களுக்கும், சங்க எல்லைப்பரப்பிற்குட்பட்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
03. நிறுவனங்களில் கடமையாற்றுவோர் விண்ணப்பிக்க விரும்பின் நிறுவனங்கள் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். இவர்களுக்கு வயது எல்லை தளர்த்தப்பட்டுள்ளது.
04. விண்ணப்பப்படிவங்களை சங்ககாரியாலயத்தில் காரியாலய நேரத்தில் ரூபா 5/- செலுத்தி பெற்றுக்கொள்ளவும். சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மட்டும்ஏற்றுக்கொள்ளப்படும். ஏனையவை நிராகரிக்கப்படும்

வயது:

சகல பதவிகளுக்கும் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பமுடிவு திகதியில் 21 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவராய் இருத்தல் வேண்டும் விண்ணப்பங்கள் யாவும் 1994/12/07 திகதிக்கு முன் பொதுமுகாமையாளர், கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்ப வேண்டும்;

தலைவர்
கோப்பாய் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.(வ-து)

(சி-10736)

சிந்தனைக்கு

> இடைஞ்சல்கள் பெரும்பாலானவை உண்மையில் என்றுமே முன்னர் ஏற்படாதவைதான்:
> - வில்லியம் இஞ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 21-11-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

முட்டுக்கட்டைகள்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான அரசாங்கம் இப்பிரச்சினைக்கு உண்மையிலேயே சமாதான ரீதியிலான தீர்வு ஒன்றைக் காண விரும்புகின்றதா? அல்லது முன்னைய அரசாங்கம் போன்று தமிழ் மக்களை மீண்டும் ஒரு முறை ஏமாற்றிவிடலாம் என எண்ணுகின்றதா?

இதுவே இன்று தமிழ் மக்கள் பலராலும் முன்வைக்கப்படும் கேள்வியாகும், அவர்களின் இக்கேள்வியில் தவறு ஏதும் இருப்பதாகவும் இல்லை. ஏனெனில் ஜனாதிபதி சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதும் இனப்பிரச்சினை தொடர்பான அரசியல் அரங்கில் பல மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்த்திருந்த மக்களுக்கு, தற்பொழுது ஏமாற்றமே மிஞ்சியுள்ளது: இந்நிலையிலேயே மேலே கூறப்பட்ட கேள்வி அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஜனாதிபதி சந்திரிகா இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண விரும்பின் அதனை உடனடியாக வெளிக்காட்டுவதோடு அதற்கேற்ற நடவடிக்கைகளிலும் இறங்கவேண்டும்; இல்லாது போனால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உண்மையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்பினால் கூட அது மக்களுக்குத் திருப்தி அளிக்காது.

இதேசமயம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு இனப்பிரச்சினை விவகாரத்தில் இரண்டு பெரிய முட்டுக்கட்டைகள் இருப்பது வெளிப்படையாகவே தெரிகின்றது: வீங்கிப் பெருத்துள்ளதோடு கடந்த காலத்தில் பல அதிகாரங்களை அனுபவித்து விட்ட இராணுவமும் தனது ஏகாதிபத்தியத்திற்குள் கட்டுப்பட்டதாக இலங்கையை வைத்துக் கொள்ள முனையும் இந்திய அரசும் அதன் புலனாய்வுத்துறையுமே இவை இரண்டுமாகும்.

கடந்த ஐ.தே.க. ஆட்சிக்கு முன்னர் இனப்பிரச்சினைத் தீர்விற்கு முக்கிய முட்டுக்கட்டைகளாக விளங்கியவை தீவிர அடிப்படைவாத பௌத்த அமைப்புக்களும், இனவாத அரசியற்கட்சிகளுமே ஆகும். தற்பொழுதும் இவ்விரு காரணிகளும் தமது செல்வாக்கை இழந்துவிடவில்லை ஆயினும் அவை சற்றுப் பலவீனப்பட்டுப் போயுள்ளன என்றே கூறலாம்.

ஆனால் மேலே கூறப்பட்டுள்ளவாறு வீங்கிப் பெருத்துப் போயுள்ள இராணுவத்தரப்பானது இன்று மிகவும் பலம் பொருந்திய அமைப்பாகவுள்ளது. இவ் இராணுவத்தரப்பை இலகுவில் சரி செய்துவிடலாம் எனவும் எண்ண முடியாது. சந்திரிகா குமாரதுங்கா பிரதமராகப் பதவி ஏற்று சுமார் மூன்று மாதங்களில் இவ் விடயத்தில் முயற்சிசெய்தும் அவரின் முயற்சி பலனளிக்கவில்லை என்பதில் இருந்தே இராணுவத்தரப்பின் பலத்தைப் புரிந்துகொள்ளமுடியும்.

இதற்கு சிறிலங்கா இராணுவம் கணிசமான அதிகாரத்தை ஏற்கனவே அனுபவிக்கத் தொடங்கிவிட்டதோடு, பல இராணுவ அதிகாரிகள் யுத்தத்தினால் பெரும் கோடீஸ்வரர்களாகவும் மாறிவிட்டமையுமே காரணமாகும். இவர்களுக்கு யுத்தமே வாழ்வளிக்கும் ஒன்றாக இருக்கும் நிலையில் அவர்கள் யுத்தத்தை நிறுத்தவும், போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கவும் எவ்வாறு ஒப்புக் கொள்வார்கள்?

அடுத்த முக்கிய தடைக்கல்லாக இருப்பது இந்தியாவும் அதன் புலனாய்வுத்துறையும் ஆகும். இவர்கள் இலங்கையில் தமது ஆதிக்கத்தை விரிவாக்க முயற்சி செய்து தோல்வி கண்டவர்கள். இவற்றிற்குக் கிடைத்த இத்தோல்வியானது விடுதலைப்புலிகள் இயக்கத்தினாலேயே கிடைத்தது அதாவது சிறிலங்கா ஆட்சியாளர்கள் இலங்கையின் ஒட்டுமொத்த இறைமையையும் இந்தியாவிடம் தாரை வார்த்துக் கொடுத்த போது அதற்கெதிராகப் போராடி காப்பாற்றியவர்கள் விடுதலைப்புலிகள் ஆகும்.

இந்தவகையில் விடுதலைப்புலிகள் இயக்கமென்பது தமது ஏகாதிபத்திய விரிவாக்கத்திற்கு ஒரு பெரும் தடைக்கல் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகவுள்ளது. இந்நிலையில் சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவது என்பது இந்தியாவினால் ஜீரணிக்க முடியாததொன்றாகவே இருக்கும். இந்தவகையில் இனப்பிரச்சினைக்கு புலிகளுடனான பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காண்பதை இந்தியா ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை.

ஆகையினால் சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வொன்றைக் காண்பதை உண்மையிலேயே விரும்புமானால் சில ஆக்கபூர்வமான முடிவுகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். இதில் ஒன்று இராணுவ தலைமைப்பீட மாற்றத்துடன் அதன் கட்டமைப்பையும் மாற்ற வேண்டும். இரண்டாவதாக சிறிலங்கா ஒரு பூரண இறைமையுள்ள நாடு என்ற ரீதியில் இந்தியாவின் அழுத்தங்களுக்கு விட்டுக் கொடுக்காது தீர்மானங்களை எடுக்க வேண்டும் அவ்வாறான நடவடிக்கைகளை எடுக்க சந்திரிகா அரசிடம் நிறையவே அதிகாரமும் உரிமையும் உண்டு. அவ்வாறு இல்லாது போனால் முன்னைய அரசாங்கங்கள் போன்று சந்திரிகா அரசாங்கமும் தமிழ்மக்களை ஏமாற்ற முற்படுகின்றதா என்று எழுந்துள்ள கேள்வி சரியானதாகிவிடும்.

ரத்வத்தைக்கு (6ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட்டோம். அது உங்களிற்கு தெரியும். அவர் அந்த கடிதத்தில் என்ன சொல்லுகிறார்? இதில் ஒரு முக்கியமான அம்சத்தைப் பார்க்கிறோம். அதாவது நாங்கள் ஏற்கனவே ஒரு தலைப்பட்சமாக போர்நிறுத்தம் செய்தோம். அதை ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக காட்டினோம். இப்பொழுது அவர்கள் நீங்கள் இன்னுமொருமுறை செய்யுங்கள் நாங்கள் அதற்குப் பிறகு செய்கிறோம் என்று வருகிறார்கள். அதையும் நாங்கள் நிராகரிக்கவில்லை.

தலைவரின் பதில் கடிதம்

தலைவர் எழுதியிருக்கிறார் நீங்கள் சொல்கிற யோசனையை நாங்கள் பரிசிலனை செய்கிறோம் என்று. அதாவது எமது தலைவர் ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்டுகிறார் போர்நிறுத்தம் செய்த காலத்தில்-விடுதலைப் புலிகள் ஒரு நல்லெண்ண காரியத்தை செய்த காலத்தில் உங்களது இராணுவம் இன்ன இன்ன கொடுமைகளை செய்திருக்கிறது. போர்நிறுத்தம் செய்வது இதில் முக்கியமல்ல அந்த போர்நிறுத்தத்தை உங்களது இராணுவம் கடைப்பிடிக்குமா? கட்டுப்பாடாக இருக்குமா? சும்மா போர்நிறுத்தத்தை செய்துவிட்டு உலகத்திற்கு நாங்கள் போர்நிறுத்தம் என்று சொல்லுகிறோம் இந்தப் போர்நிறுத்தத்தை நம்பி நாங்கள் கொழும்பிற்கு போக இயலாது. அவர்கள் கொழும்பில் வைத்து எந்த தலையை அறுப்பார்களோ யாருக்கு தெரியும்? இப்படி எமது தளபதி ஒருவர் கொல்லப்பட்டிருக்கிறார் அவருடைய கழுத்தைத் துண்டித்துக் கொண்டு போயிருக்கிறார்கள். இதைப் பற்றி தயவு செய்து விசாரணை செய்து அதுக்கு ஒரு பதிலைத் தாருங்கள், அதற்குப்பிறகு நாங்கள் முடிவைச் சொல்லுகிறோம் என்று தலைவர் எழுதி இருக்கிறார். ஏனென்றால் உடனடியாக தலைவர் இரண்டு பேருமாக சேர்ந்து செய்வோம் என்று போகவில்லை தலைவரின் நோக்கம் என்னவென்றால் போர் நிறுத்தம் என்பது முக்கியமல்ல போர்நிறுத்தம் முறையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும், இராணுவம் ஒழுங்காக இருக்க வேண்டும். மக்களிற்கு உயிராபத்து வரக்கூடாது. போராளிகளிற்கு உயிராபத்து வரக்கூடாது. அப்படியான ஒரு நிலையான உண்மையான போர்நிறுத்தம் வர வேண்டும்- அதற்கு நெடுங்கேணியில் என்ன நடந்தது என்று விசாரித்து எமக்குச் சொல்லுங்கள்.

இப்படி தலையை வெட்டிக் கொண்டு போனார்களே அந்த தலைக்கு என்ன நடந்தது சொல்லுங்கள் ஐயா?

தொடர்பு சாதனங்களின் புரளி

எங்களிற்குச் சாதகமாக விஷயங்களை இலங்கை வானொலி இருட்டடிப்புச் செய்யும் தலைவர் பிரபாகரன் ஒரு தலைப்பட்சமான போர்நிறுத்தம் ஒன்றை அறிவித்தவுடன் ஒரு செய்தி வருகிறது ஏதோ கப்பல் ஒன்று வருகிறதாம். 10 தொன் ஆயுதத்துடன் ஒரு கப்பல் வருகிறது அது எங்கிருந்து வருகிறது என்று தெரியாது. ''தலைவர் பிரபாகரன் சும்மா போர்நிறுத்தம் செய்யவில்லை. எங்கேயோ இருந்து கப்பலில் ஆயுதம் கொண்டு வருகிறார். இது எங்களைப் பேய்க்காட்டுவதற்காகத்தான் இந்த யுத்த நிறுத்தத்தை செய்கிறார்'' என்று சிங்கள மக்கள் மத்தியில் ஒரு சந்தேகத்தை ஏற்படுத்துவதற்காக இப்படி ஒரு புரளியை சிங்கள வானொலிகள் மற்றும் மக்கள் தொடர்பு சாதனங்கள் கட்டவிழ்த்து விட்டன. இப்படியாக காலத்திற்குக் காலம் தங்களிற்கு சாதகமான நேரத்தில் நல்ல செய்திகளையும் தங்களிற்குப் பாதகமான நேரத்தில் மாறான செய்திகளையும் அங்குள்ள தொடர்பு சாதனங்கள் செய்து வருகின்றன நேரடியாகவும் செய்து வருகின்றன. அது எங்களிற்கு தெரியும் மக்கள் தொடர்பு சாதனங்கள் நேர்மையான உண்மையான செய்திகளை மக்களிற்குக் கொடுக்க வேண்டும் உண்மைச் செய்திகளின் அடிப்படையில் தான் மக்களிற்கு நம்பிக்கை பிறக்கும் இவர்கள் என்ன தான் செய்தாலும் உண்மையைச் சொல்லுகிறார்கள் என்று மக்கள் எங்களை நம்புவார்கள்.

கேணல் ரத்வத்தைக்கு தலைவர் பிரபாகரன் கடிதம் ஒன்று எழுதியுள்ளார். உங்கள் போர் நிறுத்தத்தை பரிசீலனை செய்கிறோம். நடந்ததை விசாரணை செய்து இதற்கு ஏதாவது ஒரு காரணத்தைச்சொல்லலாம் அதற்கு பிறகு நாங்கள் சாதகமான முறையில் அவர்களது யோசனையை பரிசீலனை செய்வோம் என்று. நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் அங்கே இருந்து ஒரு செய்தி வரலாம்.

போர் நிறுத்த அறிவிப்பால் பயனில்லை

அதற்குப் பிறகு நாங்கள் சாதகமான முறையில் அந்த யோசனையை பரிசீலனை செய்வோம். அதாவது உங்களுக்குநான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் சிறிலங்கா அரசாங்கம் யுத்த நிறுத்தம் செய்யச் சொல்லிக் கேட்டிருக்கின்றது. ஆனால் விடுதலைப் புலிகள் பேசாமல்இருக்கின்றார்கள் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் நாங்கள் பேசாமல் இருக்கவில்லை. அதுதான் திரும்பத் திரும்பச் சொல்லுகின்றேன். யுத்த நிறுத்தம் என்று சொல்லி அறிக்கைகள் விடுவதில் அர்த்தமில்லை. அது ஒரு கடப்பாடாக ஒரு கட்டுப்பாடாக அதைப் பேண வேண்டும். ஆனால் இராணுவம் தான் பிடித்த இடங்களைவிட்டு விலக மாட்டோம் என்கின்ற நிலைப்பாடும் இந்தப் பேச்சு வார்த்தைக்கு ஒரு இடையூறாக இருக்கும்.

நாங்கள் இந்த பாதை திறப்பு விடயத்தில் இராணுவம் பின்வாங்க வேண்டும் என்று கேட்டோம். இங்குள்ள அகதிமக்கள் தமது சொந்த இடங்களுக்கு செல்லவேண்டும் என்றால் இராணுவம்விலகவேண்டும். ஆகவே இராணுவத்தின் நிலைமை இங்கு முக்கியம். அதனால் இராணுவம் பின்வாங்கினால்தான் பேச்சுவார்த்தைமுன்னேறிச்செல்லும். ஆகவே இறுக்கமாக இருந்து கொண்டு நாங்கள் என்றுமே விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று இராணுவம் ஒரு நிலைப்பாட்டை எடுத்துக் கொள்ளுமானால் பிரச்சினைகள் வரும். சந்திரிகா அம்மையார் உண்மையில் தமிழ் மக்களின் சில கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமானால் இராணுவத்தின் போர் வெறியை - பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டை போடுவதை - சமாதானத்திற்கான தடைகளை எடுக்க வேண்டும். இதற்கு இராணுவத்தை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். அப்படியான ஒரு சூழ்நிலை வந்தால் பேச்சுவார்த்தை முன்னேறிச் செல்லும்.

பேச்சுவார்த்தைக்கு இடையூறாகோம்

இந்தப் பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் வெகு சீக்கிரமாக ஆரம்பிக்கலாம். நாங்களும் முக்கியமாக இந்தப் பேச்சு வார்த்தைகளில் பங்குபற்றுவோம் இந்தப் பேச்சுவார்த்தைக்கு எந்தவிதத்திலும் இடையூறாக இருக்க மாட்டோம். இந்தப் பேச்சுவார்த்தைகளின் மூலம் எமது மக்களின் சுமையைக்குறைக்க முடியுமென்றால் நாங்கள் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கெடுத்துக் கொள்வோம்

பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட்டால் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்குமானால் மக்கள் சுதந்திரமாக ஒரு பாதையூடாக சென்றுவர முடியுமென்றால் சமாதான சூழ்நிலை பிறக்குமென்றால் ஒரு இயல்பு நிலை ஏற்படுமென்றால் நிச்சயமாக பேச்சுவார்த்தை முன்னேறும்.

ஆனால் அரசாங்கம் தனக்கு இடையூறான சக்திகளை விலக்கி இந்த விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளைமுன்னெடுக்க முயற்சிக்க வேண்டும். அதற்கான துணிவு சந்திரிகா 'அம்மையாரிடம் இருக்கிறதா என்பதை எதிர்காலம் தான் சுட்டிக்காட்டும். ஆனால் நாங்கள் எந்த விதத்திலும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு இடையூறாக இருக்க மாட்டோம்.

பொய்மை நீடித்து நிலைக்காது

எமது இயக்கத்தின் அதிகார பூர்வமான வானோசையான புலிகளின் குரல் இன்று நான்காவது ஆண்டை நிறைவு செய்கிறது. புலிகளின் குரல் சேவை பற்றி இங்கு பல அறிஞர்கள், கலைஞர்கள் ஏற்கனவே ஆசியுரைகள் வழங்கியிருக்கின்றார்கள். தலைவர் அவர்கள் கூட ஒரு வாழ்த்துச் செய்தியை அனுப்பி இருந்தார். அதைப்பார்த்தேன். அதில் ஒரு முக்கியமான விஷயத்தை குறிப்பிடுகின்றார். அதாவது ஒரு விடுதலை இயக்கத்தின் குரலாக ஒலிக்கும் எமது வானோசை உண்மையின் குரலாக-சத்தியத்தின் குரலாக-மக்களிற்கு உண்மையை எடுத்து விளக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தி சொல்லியிருக்கின்றார் ஏனென்றால். அவர் குறிப்பிட்டது போல பொய்மைக்கு ஆயுள்குறைவு. பொய்மை நீடித்து நிலைத்து நிற்காது. அது வரலாற்றுத் தொட்டிக்குள் வீசி விடப்படும். ஆனால் சத்தியம் நித்தியமானது, நிலையானது ஆகவே சத்தியத்தின் குரலாக எமது போராட்டத்தின் குரல் ஒலிக்க வேண்டும் என அவர் அழகாக, நேர்த்தியாக சொல்லியிருக்கின்றார்.

எங்களது அனுபவத்தில் இருந்தும் தெரியும். இங்கு பல வானொலிகள் இயங்கின. இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பு காலகட்டத்தில் எத்தனையோ பெயர்களில் பல வானொலிகள் இங்கு செயற்பட்டதை நீங்கள் அறிவீர்கள்.

சமீப காலமாக எலிகளின் குரல் என்று வானொலி இங்கு நடந்தது. ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.பி.டி.பி. ஆகியோரின் குரலாக இந்த எலிகளின் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. பொய்யையும் புளுகையும் சதா சொல்லி மக்களை திசை திருப்ப இந்த வானொலி முனைந்தது இதை சிலர் இரகசியமாக கேட்டதும் எமக்கு தெரியும் ஒரு யமதர்மராசா அவரிற்கு ஒரு ஆலோசகர். ஆலோசகர் என்று சொல்லாமல் தலையாட்டுகின்ற அமோசகர் என்று சொல்வார்கள் அவருடைய ஆஸ்தான கவிஞராக இன்னும் ஒருவர் இப்படியாகஇவைகள் எல்லாரும் சேர்ந்து ஒரு அராஜகம் ஒரு கொடுங்கோன்மை ஆட்சியை இங்கு நடத்தி வருவதாக நாளுக்கு நாள் கதைகள் சொல்லுவார்கள்.

ஆனால் இந்தப் புளுகு எத்தனை காலத்திற்கு நிலைத்து நின்றது? பொய்மை எத்தனை காலத்திற்கு நிலைத்து நின்றது? ஆகையினால் உண்மையை மக்களிடம் சொல்லி என்ன நடக்கிறது என்று மக்களிற்கு சொல்லி மக்களின் நல்லாசியை நம்பிக்கையைப்பெற்று ஒரு மக்கள் தொடர்பு சாதனம் மக்கள் தொடர்பு கருவியாக விளங்கும் வானொலி, மக்கள் மத்தியில் உண்மையைப் பரப்ப வேண்டும் இதைத்தான் தலைவர் அந்த செய்தியில் வெளியிட்டு இருக்கின்றார்.

மேற்குலகில் புலிகள் விமானப்படைப் பயிற்சி

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழீழ வான் புலிகள் என்னும் ஒரு பிரிவைத் தொடக்கி இருப்பதாகவும், மேற்கத்தைய நாடுகளில் சுமார் இருபது புலிப்படைப் போராளிகள் போர் விமானங்களை ஓட்டும் பயிற்சியை பெற்றுக்கொண்டிருப்பதாகவும், மேற்கு நாடுகளில் எடை குறைந்த சில விமானங்களை விடுதலைப் புலிகள் கொள்வனவு செய்திருப்பதாகவும் கொழும்பிலிருந்து வெளிவரும் சண்டே ஐலன்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

இதுபற்றி அப்பத்திரிகை மேலும் குறிப்பிடுகையில் இவ் விமானங்கள் விரைவில் விடுதலைப்புலிகள் வசம் கிடைக்கக்கூடும் எனவும், விமானப் படையின் உதவியுடன் விடுதலைப் புலிகள் அரச படையினருக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தக்கூடுமெனவும் தெரிவித்துள்ளது. அத்துடன் கிளிநொச்சிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் விமானப் பயிற்சி நிலையமொன்று கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் குண்டு வீச்சினால்

ஐலண்ட் தகவல்

அழிக்கப்பட்டதாகவும் அது கூறியுள்ளது: இதேவேளை விடுதலைப் புலிகளின் வான் படைப் பிரிவு தொடர்பாக கிடைக்கபபெற்ற தகவல்களின் அடிப்படையில் சிறிலங்காவின் பாதுகாப்பு வட்டாரங்கள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளன.

மேலும் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக சிறைப்படுத்தப்பட்டுள்ள பிரதான சாட்சிகளைக் கொலை செய்வதே வான் புலிகளின் முதலாவது இலக்காக இருக்கும்: இவ்வாறு இந்தியாவின் வெளிநாட்டு புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது.

பாரமற்ற ஒற்றை ஆசனங்களை உடைய விமானங்களிற்கு தேவையான உடற்கூறுகள் இவ்வருடத்தின் மத்தியில் ஆயுதங்களுடன் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், இரணைமடுக் குளத்திற்கு அருகே இது தொடர்பான சமிக்ஞைகள் கிடைத்திருப்பதாகவும் இராணுவ புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது-

தமிழீழ மீட்புநிதி கடன் மீளல்

தமிழீழ விடுதலைப்புலிகள் நிதித்துறையினரால் 1994 ஆம் ஆண்டு மாவீரர் வாரத்தில் மீளளிக்கவென அறிவிக்கப்பட்டோருக்கான தமிழீழ மீட்புநிதிக் கடன் பின்வரும் நேர அட்டவணைப்படி மீளளிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது:

22-11-1994 செவ்வாய்க்கிழமை

	நேரம்	இடம்
நல்லூர்	காலை 9 மணி	இளங்கலைஞர் மன்றம் சட்டநாதர் வீதி, நல்லூர்
யாழ்ப்பாணம்	,,	,,
காரைநகர்	,,	,,
வேலணை	,,	,,
மானிப்பாய்	பி.ப. 2 மணி	வட்டு இந்துக்கல்லூரி சித்தன்கேணி
சங்கானை	,,	,,
உடுவில்	பி.ப. 4 மணி	இணுவில் இந்துக்கல்லூரி இணுவில்
தெல்லிப்பளை	,,	,,

23-11-1994 புதன்கிழமை

கோப்பாய்	காலை 9 மணி	கிறிஸ்தவக் கல்லூரி கோப்பாய்
சாவகச்சேரி	மு.ப 11-30மணி	தெய்வேந்திரா தியேட்டர் சாவகச்சேரி
பச்சிலைப்பள்ளி	,,	,,
கரவெட்டி	பி.ப. 2-30 மணி	வட இந்து மகளிர் கல்லூரி
பருத்தித்துறை	,,	,,
வடமராட்சி கிழக்கு	,,	,,

பிரதி நிதி அமைச்சராக பீரிஸ் நியமனமாவார்?

நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் பிரதி நிதியமைச்சராகவும் நியமிக்கப்பட இருப்பதாக நம்பகமாகத் தெரியவருகிறது.

நாளை செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருக்கும் மினி வரவு செலவுத் திட்டத்தையும், அடுத்தவருடம் முற்பகுதியில் சமர்ப்பிக்கவுள்ள ஓராண்டு வரவு-செலவுத் திட்டத்தையும் சமர்ப்பிக்கும் பொறுப்பு பேராசிரியர் ஜி. எல். பீரிஸிடமே ஒப்படைக்கப்படும் என்றும் அரச வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது:

பாதுகாப்பு

பதவி வகிக்கும் ஹமில்ரன் வணசிங்காவின் பதவிக்கு அனேகமாக ஓய்வுபெற்ற படைத்தளபதிகளை நியமிப்பதில்லை எனவும் நிர்வாக சேவையில் உள்ள ஒரு அதிகாரியையே பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிப்பது எனவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் அடிப்படையில் பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளர் பதவிக்கு நான்கு நிர்வாக சேவை அதிகாரிகளின் பெயர்களே அடிபடுகின்றன. அவற்றுள் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வாவின் பெயரே பலமாக அடிபடுவதாக பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

மாவீரர்

கைகள் கட்டப்பட்டுள்ளன. மாவீரர் நினைவுத்தூபிகள் புதுப்பொலிவு பெற்றுள்ளன.

பொது நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், திணைக்களங்கள், விடுதலைப் புலிகளின் பாசறைகள் என்பன சிறப்புற அலங்கரிக்கப்பட்டுள்ளன- பல இடங்களில் மின் அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன-

புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994. 11. 21
திங்கள் இரவு

08.01 - மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி- தமிழீழன் எழுதிய '' உதயத் தமிழீழம் நல்க உயிர் கொடுத்த மாவீரர்''
08.20 - புலிகளின் குரல் வானொலியின் 4ம் ஆண்டு நினைவாக நடைபெற்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பு
08.30 - செய்திகள்
08.40 - தரிசனம்-தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் அவர்களுடனான செவ்வி.
09.00 - மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

1994. 11. 22
செவ்வாய் காலை

07.02 - மாவீரவணக்கம்
07.15 - இன்றைய தாரகை
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி - சி. கண்ணம்மா எழுதிய '' சுதந்திரப் போரின் சுவடுகள்''
08.00 - மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

ரத்வத்தைக்கு (முதலாம் பக்கத்தொடர்ச்சி)

பதற்றப்பட்டுப்போனார்- குழம்பிப்போனார். அதனால் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறிப்போனார் என்று சிலபேர் சொன்னார்கள்.

குண்டுவெடிப்புபற்றி எமக்கு தெரியாது

கொழும்பில் குண்டுகள் வெடிக்கிறது இயல்பு. அது யார் செய்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. யார் செய்தார்கள் என்பது பிரச்சினை அல்ல இப்படியான குண்டுகள் ஏன் வெடிக்கின்றது? அதில் பலியாகிறவர்கள் எப்படிப்பட்ட ஆட்கள்? என்பதை சிந்தித்துப்பார்த்தால் தமிழ் மக்களிற்கு எதிராக பெரிய இனப் படுகொலையைத் திட்டமிட்டு நடத்தி இரத்தக்களரியை நடத்தி அப்படிப்பட்ட கொலைகளிற்குக் காரணமாக இருந்தவர்கள் தான் இந்தக் குண்டு வெடிப்பிற்கு ஆளாகிறார்கள் என்ற உண்மை மட்டும் எங்களிற்கு தெரியும். இது ஒரு வித்தியாசமான பரிமாணத்தில் நடந்து கொண்டிருக்கிறது.

சிங்களவரிற்கும் தமிழர்களைப் போல கர்மவினையில நம்பிக்கை இருக்கிறது. கர்மவினை என்றால் இந்த பிறப்பில் செய்த பாவங்களிற்கு அடுத்த பிறப்பில் உத்தரிப்பது. ஆனால் இப்பொழுது இங்கே என்ன நடக்கிறது என்றால் இந்த உலகத்தில் செய்த அநியாயங்களிற்கு-பாவங்களிற்கு அடுத்த பிறப்பு எடுக்கத் தேவையில்லை. இப்பொழுது இங்கேயே கர்மவினை போக்கப்படுகிறது ஆகவே இந்த கர்ம வினையைச் செய்தவர்கள் அடுத்த பிறப்பு என்ற பிரச்சினை இல்லாமல் இப்பொழுதே போய்ச் சேருகிறார்கள் இது அவர்கள் செய்த பாவத்திற்கு அவர்களிற்கு கிட்டுகிறது. இதை யார் செய்தார்களோ எனக்குத் தெரியாது ஆனால் சந்திரிகா அம்மையார் இதையிட்டு கலங்கத் தேவையில்லை. இது ஒரு வழியில் அவவிற்கு நன்மையாகத்தான் அமைந்திருக்கிறது. ஏன் என்றால் தொண்டமான் போன்றவர்கள் ஜனாதிபதி தேர்தலிற்கு முதல் வேதாளம் போல் கொப்பில தொங்கிக் கொண்டிருந்தார்கள்? அங்கால பாய்கிறதா? இங்கால பாய்கிறதா? என்று இந்த குண்டு வெடித்த தோட இங்கால பாய்ந்துவிட்டார்.

ஆகவே குண்டு வெடிப்பால் ஒரு பெரும்பான்மை பலத்தோட சந்திரிகா அம்மையார் ஆட்சிக்கு வந்திருக்கிறார். இது ஒரு நல்ல காரியம். அது வேறு விஷயம். அதுக்கும் பேச்சுவார்த்தைக்கும் சம்பந்தமில்லை.

நட்புடன் பேச்சு நடத்தினோம்

பேச்சுவார்த்தை ஒழுங்கான முறையில் நடந்தது. இங்கு வந்த சிங்கள அரச பிரதிநிதிகளை நாங்கள் வரவேற்று நட்புறவுடன் நல்லெண்ணத்துடன் பேச்சுக்களை நடத்தினோம் இந்த பேச்சுக்களை எமது இயக்கம் ஒத்திப்போடவில்லை. அவர்கள் தான் ஒத்திப்போட்டார்கள். இப்பொழுது நிலைமை என்ன? குண்டு வெடித்து சனகாலமாகிவிட்டது. தேர்தல் நடந்தது. மீண்டும் சர்வ அதிகாரங்களுடன் சந்திரிகா அம்மையார் ஆட்சிக்கு வந்திருக்கிறார். நல்ல விஷயம் ஆனால் பேச்சுவார்த்தையை அதாவது விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேசுவதை அவர் கைவிடவில்லை பேசப்போகிறார். ஆனால் மிகவும் அவதானமாக நுட்பமாக மெல்ல மெல்ல காலடி எடுத்துவைத்து காய்களை நகர்த்த அரசாங்கம் விரும்புகிறது. அது நல்ல விஷயம் அதை நாங்கள் வரவேற்கின்றோம். எங்களுடைய சமாதானக் கதவு நித்தமும் திறந்தே கிடக்கிறது எப்பொழுதும் வரலாம் பேச்சுவார்த்தை விரைவில் நடக்கும்.

சிங்கள ஆயுதப்படை முட்டுக்கட்டை

ஆனால் இதில் ஒரு சிக்கல் ஒன்று இருக்கிறது இந்தப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கு முட்டுக்கட்டையாக ஒரு சக்தி நிற்கிறது. அந்த சக்திதான் சிங்கள ஆயுதப் படைகள் நாங்கள் முன்பு பேச்சுவார்த்தைகளை நடத்தியபோது மூன்று விஷயங்களை வலியுறுத்தினோம். அதாவது போர்நிறுத்தம் செய்யப்பட வேண்டும், போக்குவரத்துப் பாதை திறக்கப்பட வேண்டும் பொருளாதாரத்தடை முற்றாக நீக்கப்படவேண்டும் என்ற மூன்று விஷயங்களை வலியுறுத்தினோம். ஏனென்றால் சந்திரிகா அரசு சொல்லியது தமிழீழ மக்களின் அவசரமான பிரச்சினைகள்- அன்றாடப் பிரச்சினைகள்- உடனடியான பிரச்சினைகளை முதலில் தீர்த்து வைப்போம். அதற்குப்பிறகு அடிப்படைப் பிரச்சினைகளைப் பார்ப்போம் என்று. நாங்களும் அதற்கு இணங்கினோம். அது நல்ல விஷயம் மக்கள்நீண்டகாலமாக யுத்தத்தினால் பெரிதாக பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஏகப்பட்ட சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளை எமது மக்கள் சந்தித்திருக்கின்றார்கள்.

இவர்களிற்குமூச்சுவிட இடைவெளி வேண்டும். இவர்களுடைய பிரச்சினைகள் முழுமையாக தீர்க்கப்பட வேண்டும். இதற்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பையும் தருவோம் இந்த போரை நிறுத்தி சமாதானத்தைக் கொண்டுவருவோம். பொருளாதாரத் தடைகளை நீக்குவோம். மக்கள் இலகுவாக போக்குவரத்து நடத்துவதற்கு பாதைகளை திறந்துவிடுவோம். இந்த மூன்று கோரிக்கைகளையும்நிறைவேற்றுவதானால் அதற்கு சிறிலங்கா இராணுவம் ஒத்துழைக்க வேண்டும். ஆனால் சிறிலங்கா இராணுவம் ஒத்துழைப்பதாக இல்லை. போர் நிறுத்தம் என்றால் சிறிலங்கா இராணுவத்தின் ஒத்துழைப்பு தேவை அவர்கள் போர் நிறுத்தத்திற்கு இடையூறாக இருக்கின்றார்கள். பாதையைத் திறப்பது என்றால் பூநகரியில் இருந்து இராணுவம் விலக வேண்டும் அதற்கும் ஒரு அங்குலம் கூட நாங்கள் அசைய மாட்டோம் என்றுஇராணுவம் சொல்கிறது.

பொருளாதாரத்தடையை முற்றாக நீக்குவதென்றால் அதற்கும் இராணுவம் எதிர்; டீசல், பெற்றோல, உரவகைகள் இங்கு அனுமதிக்க முடியாது என்று இராணுவம் சொல்கிறது. தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை தீர்த்துவைக்கும் மூன்று கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கு இராணுவம் முட்டுக்கட்டையாக இருக்கிறது.

குடும்பத்தின் கையில் அதிகாரம்

போனமுறை பேச்சுவார்த்தையில் எங்களிற்கு சொல்லப்பட்டது என்னவென்றால் இராணுவத்தை கட்டுப் படுத்துவதற்கு தங்களிற்கு அதிகாரம் காணாது என்று. நீங்கள் கேட்கும் இந்த கோரிக்கைகள் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் இந்த கோரிக்கைகளை நாங்கள் நிறைவேற்றுவது என்றால் எங்களிற்கு முழுமையான ஆட்சி அதிகாரம் வேண்டும் என்று. அந்த நேரத்தில் சொன்னார்கள் கொழும்பில் இரண்டு அரசுகள் இருக்கிறது என்று. ஒன்று பாராளுமன்று அரசு, மற்றையது ஜனாதிபதி அரசு. ஜனாதிபதிக்குத்தான் முழு அதிகாரங்களும் இருக்கிறது. அவர்தான் முப்படைத் தளபதி: பாதுகாப்பு அமைச்சர் அவர் மற்றக் கட்சியைச் சார்ந்தவர் இப்படியான விடயங்களிற்கு அவர் விடமாட்டார் எங்களிற்கு முழு அதிகாரங்களும் வரட்டும் நாங்கள் உங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுகிறோம் என்று சொன்னார்கள்.

இப்பொழுது அந்த அதிகாரம் கிடைக்கப்பெற்றது. அந்த அதிகாரம் மட்டும் அல்ல மக்களிடம் இருந்து ஒரு மனுவும் கிடைக்கப் பெற்றது. அதாவது தமிழரின் பிரச்சினையை சமாதான முறையில் தீர்த்துவைப்பதற்கான பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆணை மனு இந்த அரசிற்குக் கொடுக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல் அதிகாரமும் கையில் இருக்கிறது. சகல அதிகாரங்களும் இந்த அரசிடம் இருக்கிறது மகள் ஜனாதிபதி கிழவி பிரதம மந்திரி. இப்படியாக ஒரு குடும்பத்தின் கையில் அரசாங்கம் போயிருக்கிறது. எனி என்ன தேவை உங்களிற்கு? வந்து பேசலாம் பிரச்சினைகளைத் தீர்க்கலாம். ஆனால் எங்களிற்குக் கிடைத்த தகவலின்படி இன்னும் பிரச்சினை இருக்கிறது இராணுவத் தலைமை இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது.

போர் இடைநிறுத்தம் அரசிற்கு தெரியும்

தலைவர் பிரபாகரன் அவர்கள் ஒரு வார யுத்தநிறுத்தம் பிரகடனம் செய்தார். போர் நடவடிக்கைகளை ஒரு வாரத்திற்கு நிறுத்தி வைத்தார். நாங்கள் இதனைச் சும்மா செய்யவில்லை. சந்திரிகா ஜனாதிபதியாக பதவி ஏற்றதைத் தொடர்ந்து சந்திரிகா அரசிற்கு ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக இந்த போர் நிறுத்தம் பிரகடனம் செய்யப்பட்டது சிலர் சொன்னார்கள் நீங்கள் இதனை. அரசாங்கத்திற்கு அறிவித்தால் என்ன என்று. ஆனால் அரசாங்கம் தான் எங்களிற்கு அறிவித்தது நாங்கள் செய்த போர் நிறுத்தத்தை அரசாங்கத்திற்குத்தான் முதலில் இது தெரியும். அதாவது இந்த போர் நிறுத்தத்தை. பிரகடனம் செய்து பத்திரிகையாளர் மாநாட்டை கூட்டி இதை மக்களிற்கு தெரியப்படுத்துவதற்கு முதல் சிறிலங்கா புலனாய்வுத்துறை அதனை ஒட்டுக்கேட்டு புலிகள் இப்படி பிரகடனம் செய்திருக்கிறார்கள் என்று உலகம் முழுதும் சொல்லி வானொலிகள் எல்லாவற்றிலும் வந்த பிறகு தான் எங்களிற்கு தெரியும் அதற்குப்பிறகு இதை' நாங்கள் உத்தியோகபூர்வமாக சொல்லத் தேவையில்லை. ஏனென்றால் அவர்களின் அரச நிறுவனம் ஒன்று தான் அதனை ஒட்டுக்கேட்டது பிரபாகரனின் குரலில் அதுபதியப்பட்டதாக சொன்னார்கள் நாங்கள் அதனைப் பகிரங்கப்படுத்தினோம். நாங்கள் இந்த நோக்கத்திற்காக யுத்தநிறுத்தம் செய்திருக்கிறோம் என்று அது மாத்திரம் அல்ல சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மூலமாக இந்த தகவலை உத்தியோகபூர்வமாக பாதுகாப்பு அமைச்சிற்கு அறிவித்தோம். ஆனால் அரசாங்கம் பேசாமல் இருந்தது.

போர்ஓய்வு ராணுவம் விரும்பவில்லை

அரசாங்கம் ஒருபுறம் பேசாமல் இருந்தது பரவாயில்லை. இராணுவம் என்ன செய்தது? கடற்படை கரையோரப் பகுதிகளில் தாக்குதலை நடத்துகிறது. எங்கள் மீனவர்களை கொல்கிறது. விமானப்படை ஹெலிக்கொப்ரர் மக்கள் குடியிருப்புக்கள்மீதுவேட்டுக்களை தீர்க்கிறது. பயணிகளின் பஸ்களை தாக்குகிறது. சும்மா கிடந்தது எழும்பி வந்து புலிகளின் இந்த பிரகடனத்தை அடுத்து இந்த தாக்குதல்களை நடத்தின எமது தளபதி லெப். கேணல் அமுதன் ஒரு மூத்த தளபதி அவரை பதுங்கியிருந்து தாக்கியது. சுட்டுக்கொன்றதும் அல்லாமல் அந்த தளபதியின் தலையையும் வெட்டிக் கொண்டு போனார்கள் என்னத்திற்கு உங்களுக்கு அந்தத்தலை? இது தேவையில்லாத சேட்டையல்லவா? இங்கே பிரபாகரன் நேசக்கரம் நீட்டுகிறார். நீ கழுத்தை வெட்டிக்கொண்டு திரிகிறாய். அப்பொழுதுஎவ்வாறுசமாதான சமிக்ஞையை நாங்கள் காட்டுவது?

இராணுவத்திற்கு யுத்த நிறுத்தத்தில் விருப்பம் இல்லை, ஏனென்றால் இதற்கு பல காரணங்கள். இருக்கிறது மேல் மட்டம் இந்த யுத்தத்தால்காசுஅடித்துக்கொண்டு திரிகிறார்கள் ஆயுதத்தை கொள்வனவு செய்வதிலும் வேறு வழிகளிலும் காசுகளை அடித்துக்கொண்டிருக்கிறார்கள். யுத்த நிறுத்தம் இல்லாமல் இருந்தால் தான் தாங்கள் கோடீஸ்வரர்களாக மாறிக் கொண்டிருக்கலாம். வேறு ஒரு மட்டம் போய்வரும் வழிகளில் வியாபாரிகளிடம் கொள்ளை அடித்துக்கொண்டு இருக்கின்றனர். இப்படியாக இராணுவத்தின் உயர் மட்டம் யுத்தத்தினால் நன்மை பெறுகின்றனர்.

அது தவிர யுத்த நிறுத்தம் செய்தால் விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும்,குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் சுதந்திரமாக நடமாடுவார்கள். அதனை நாங்கள் அனுமதிக்க முடியாது. சில சமயங்களில் எங்களைப் பின்னோக்கி போகச் செல்வார்கள். அதனை நாங்கள் ஏற்க முடியாது. இப்படியான காரணங்களைக் காட்டி இராணுவம் யுத்த நிறுத்தத்தை மறுக்கிறது. ஆனால் இந்த யுத்த நிறுத்தத்தை தலைவர் பிரபாகரன் ஏற்கனவே சொன்னதுபோல அந்த நேரத்திலேயே அனுஷ்டித்திருந்தால் பல சம்பவங்களைத் தவிர்த்திருக்கலாம். ஆகவே நாங்கள் எடுக்கின்ற போர் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் ஒரு செய்தியைச் சொல்லிக் கொண்டிருக்கிறது. நீயுத்தநிறுத்தம் செய்யாததால் உனக்கு இந்த அடி விழுகிறது. இப்போது யுத்தநிறுத்தம் செய்து அது நேற்றுடன் முடிவடைந்தது. சரி என்ன செய்யப் போகின்றனர்?

ரத்வத்தையின் கடிதம்

கேணல் ரத்வத்த தலைவர் பிரபாகரவிற்கு ஒரு கடிதம் அனுப்பி இருக்கின்றார். இன்றுதான்கிடைத்தது அந்த கடிதம். அந்தகடிதத்தில ரத்வத்த என்னசொல்கிறார்என்றால் நீங்கள்யுத்தநிறுத்தம் செய்தீர்கள எங்களிற்கு அதைப்பற்றிதெரியாது. எங்களிற்கு அது பற்றி அறிவிக்கப்படவில்லை என்று. ஆனால் அதுபொய் ஏனென்றால் நான்ஏற்கனவேகூறிய மாதிரி யுத்த நிறுத்தத்தை உலகத்திற்கும் பி.பி.சிக்கும் மற்றப் பத்திரிகைகளுக்கும் கொடுத்தது அரசாங்கம் தான். அரசாங்க புலனாய்வுத்துறை நிறுவனம் மூலம் தான் இந்த செய்தி வெளியில் கொடுக்கப்பட்டது

அத்துடன் நாங்கள் சும்மா இருக்கவில்லை. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் பாதுகாப்பு அமைச்சிற்கு நாங்கள் யுத்த நிறுத்தம் செய்துள்ளதாக தகவலைக் கொடுத்தோம். அதை நாங்கள் மறைத்துச் செய்யவில்லை. பத்திரிகைகளில் அறிக்கை

(5ம் பக்கம் பார்க்க)

புதிய அரசின் மினிபட்ஜட் நாளை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இந்த வருடம் டிசம்பர் 31 ஆம் திகதி வரைக்கும் செலவினங்களை சமாளிப்பதற்காக புதிய அரசு 4779 கோடி 78 லட்சத்து 24 ஆயிரம் ரூபாவை கணக்கு வாக்குப் பணத்தின் மூலம் ஏற்பாடு செய்துள்ளது

நாளை செவ்வாய் பாராளுமன்றம் கூடும் போது இதற்கான பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த கணக்கு வாக்கு பணத்திற்கான செலவின விபரங்கள் இரு அட்டவணைகளில் குறிக்கப்பட்டன. முதல் அட்டவணை கீழாக செலவுக்கு 4516கோடி 62 லட்சத்து 62 ஆயிரம் ரூபா தேவை என விபரிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது அட்டவணையின் கீழான செலவினங்களைச் சமாளிக்க 263 கோடியே 15 லட்சத்து 62 ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத தொகை ஒதுக்கப்பட வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

தனிக்கொட்டகை

யாழ் - வைத்தீஸ்வராக்கல்லூரியில் இயங்கி வரும் சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயத்திற்கென தனியான கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (22

விண்ணுலக வாழ்வின்
முதலாண்டு நினைவஞ்சலி

வையத்துள் 18 — 04 — 1927

தெய்வத்துள் 01 — 12 — 1993

அமரர் சங்கரப்பிள்ளை பிதாம்பரம்

(ஓய்வுபெற்ற உப அதிபர் - யா/நல்லூர் ஸ்தான சி. சி. த. க பாடசாலை)

திதி: 21-11-1994 (திங்கட்கிழமை)

அப்பாவே! மேலாம் அறிவின் திருவுருவே!
இப்பாரில் இல்லத் தொளிவிளக்காய்ச் - செப்பரிய
பாசத்தை ஈந்தீர் பரனடியிற் கூடிய உம்
நேசம் நினைப்போம் நிதம்.

தங்களின் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

என்றும் தங்கள் ஒளியின்றி வாடும்,
அன்பு மனைவி - சிவயோகம்
பாசமிகு மகள்மார்:
மலிகாதேவி, பத்மராணி
சகோதரர்கள். மைத்துனர்கள்

'சிவபதி'
நாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்,
(10117)

6 வது வெற்றி வாரமாக
யாழ். ஸ்ரீதர் அகலத்திரையில்
முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகமும்
நிதர்சனமும் இணைந்து வழங்கும்
பொ. தாசனின்
"இன்னும் ஒரு நாடு"
தினசரி மாலை 4-00, 6-00
சனி, ஞாயிறு காலை 10-30. 4-30, 6-30
தினசரி 2-30, மட்டும்
செப்டம்பர் மாத ஒளிவீச்சு - 94
இத்துடன் மாவீரர்களின் 93ம் ஆண்டு
ஒளிநாடாவும் காண்பிக்கப்படுகிறது.
(சி-10750)

புதிய உயர் கல்லூரி
மாணவர்களுக்கு
முக்கிய அறிவித்தல்

22-11-94 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பின்வரும் பிரிவுகளில் கல்வி கற்கும் மாணவர்களை எமது கல்லூரியில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

★ GAQ 95 (பேராதனை)
★ GAQ 95 (யாழ்ப்பாணம்)
★ A/L 95 & 96

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்:

நிர்வாகி
புதிய உயர் கல்லூரி

(சி-10749)

மரண அறிவித்தல்

கந்தையா வள்ளிப்பிள்ளை

கந்தையா வள்ளிப்பிள்ளை 20-11-94 அன்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தையாவின் அன்பு மனைவியும், வேலுப்பிள்ளை,நாச்சிப்பிள்ளை,வேலாயுதம்பிள்ளை(சுவிஸ்), காசிப்பிள்ளை (மிருக வைத்திய நிலையம், சாவகச்சேரி). நாகம்மா ஆகியோரின் அருமைத்தாயாரும், ஆறுமுகம், பரமேஸ்வரி, புவனேஸ்வரி, அரியமலர், காசிநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் விடத்தல் பளையில் (20-11-94) நேற்று இடம்பெற்றன.

தகவல்:
க. காசிப்பிள்ளை
(மகன்)

புலோப்பளை,
பளை.

(10153)

வீரச்சாவு

வீரவேங்கை ராஜராஜன்

மட்டக்களப்பு மாவடி முன்மாரிப்பிரதேசத்தில் தேடுதல் வேட்டை மேற்கொள்ளவென பரவலாக முன்னேறிய இராணுவத்தினருக்கும்விடுதலைப்புலிகளுக்குமிடையில நேரடி மோதலொன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த 15-ம் திகதி காலை 7.20 மணியளவில் பனை அறுப்பான் என்னும் இடத்தில் இடம்பெற்ற இந்நேரடி மோதலில் இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை

விடுதலைப் புலிகள் தரப்பில் வீரவேங்கை ராஜராஜன் (மாரிமுத்து மூத்ததம்பி, மட்டக்களப்பு) என்னும்போராளி வீரச்சாவு அடைந்தார் இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்

திருத்தம்

கோப்பாய் வட்டத்தின் மாவீரர் ஆலயம் கோப்பாய் கந்தசுவாமி கோவில் முன்றலிலேயே அமைக்கப்பட்டுள்ளது. இது நேற்று நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோவில் முன்றலில் என குறிப்பிடப்பட்டுள்ளமை தவறானதாகும்.

டிசம்பர்

காப்பு அமைச்சின் செயலாளர் பதவி கைமாறும் எனவும் செய்திகள் வெளிவந்தமை தெரிந்ததே

இம்மாற்றங்கள் டிசம்பர் 15-ம் திகதிக்கு முன்னர் நிகழக்கூடிய சாத்தியங்கள இருப்பதாக அவ் அதிகாரி தெரிவித்துள்ளார் தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினன்ட் கேணல்ஜெரிடிசில்வாவின் பதவிக்காலம் ஜனவரி மாதத்துடன்முடிவடைகிறது, அவருக்கு அடுத்த ஸ்தானத்தில் இருப்பவர் இராணுவப் பிரதம தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம இவரின் பதவிக்காலம் அடுத்த வருடம் மே மாதத்துடன் முடிவடைகிறது மூன்றாவது ஸ்தானத்தில் இருப்பவர் மேஜர் ஜெனரல் றொகான் தலுவத்த. இவர் வடபகுதிக்கு பொறுப்பாக இருந்த காலத்தில் பூநகரி, நாகதேவன்துறை இராணுவ கடற்படை முகாம்கள் விடுதலைப் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டன, இது குறித்து இவர் மீது விசாரணை நடைபெற்றுவருகிறது; நான்காவது ஸ்தானத்தில் இருப்பவர் மேஜர் ஜெனரல் நந்த சில்வா இவர் யுத்தப்பிராந்தியத்தில் என்றுமே கடமை புரியாதவர், இதனால் இவருக்கும் அந்தப்பதவி கிடைக்காது எனத் தெரியவருகிறது.

தற்போதைய இராணுவ தளபதிக்கு பின்னர் அந்தப் பதவியைவகிக்க கமாண்டோ படைப்பிரிவின் தலைவர் பிரிகேடியர் ஜானக பெரேராவிற்கு வாய்ப்பு இருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விமானப்படையை எடுத்துக்கொண்டால் தற்போதைய விமானப்படைத் தளபதி ஏயார் சிப் மார்சல் ஒலிவர் ரணசிங்கவிற்கு அடுத்தபடியாக இருக்கும் ஏயார் வைஸ்மார்ஷல் எசல பீரிஸின் பதவிக்காலம் அடுத்த வருடம் ஜூன் மாதத்துடன் முடிவடைகிறது, இவருக்கு அடுத்தபடியாக இருக்கும் சிரேஸ்ட பொலிஸ்மா அதிபர் விக்கிரம ஆரிய சிங்கவிற்குக்கிடைக்கவிருக்கிறது.

இதற்கிடையே கடற்படையிலும் மாற்றங்கள் ஏற்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டு வருகிறது. எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் புதிய இடமாற்றத்திட்டமொன்று பொலிஸ்திணைக்களத்தில் அமுல்நடத்தப்பட இருக்கிறது

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.